# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# தமிழ்நாடு காவல் துறை

மானியக் கோரிக்கை எண். 22

கொள்கை விளக்கக் குறிப்பு

**2016–2017**

## செல்வி ஜெ ஜெயலலிதா

## முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
**2016**

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# தமிழ்நாடு காவல் துறை

## மானியக் கோரிக்கை எண். 22

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2016–2017


## செல்வி ஜெ ஜெயலலிதா

## முதலமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2016

# பொருளடக்கம்



| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I | முன்னுரை | 1 – 3 |
| II | நிருவாக அமைப்பு | 4–6 |
| III | சட்டம் – ஒழுங்கு | 6–16 |
| IV | குற்ற நிலவரம் | 17–24 |
| V | சாலை விபத்துகள் | 25 –30 |
| VI | காவல் துறை நவீனமயமாக்கல் | 30 – 42 |
| VII | நலத்திட்டங்கள் | 42 – 56 |
| VIII | பெண் காவலர்கள் | 56– 58 |
| IX | காவல் துறையில் சிறப்புப் பிரிவுகள் | 59 –154 |
| X | வாகன வசதி | 155–156 |
| XI | காவலர் வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள் | 156– 161 |
| XII | காவலர் பணிகளில் தேர்வு, பதவி உயர்வு மற்றும் நிலை உயர்த்துதல் | 162– 168 |
| XIII | அகில இந்திய காவல் போட்டிகள் | 168 – 173 |
| XIV | தடய அறிவியல் துறை | 173– 180 |
| XV | முடிவுரை | 180–182 |
| | பிற்சேர்க்கைகள் I - X | 183– 196 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# தமிழ்நாடு காவல் துறை

# மானியக் கோரிக்கை எண்.22

# கொள்கை விளக்கக் குறிப்பு 2016–2017

## I முன்னுரை

**நீரின்றி அமையாது உலகு**
**காவல் பணியின்றி அமையாது அமைதி**
**அமைதி, வளம் இன்றி அமையாது வளர்ச்சி**

ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பொது ஒழுங்கு, அமைதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஆகியன இன்றியமையாததாகும். **"மக்களால் நான், மக்களுக்காகவே நான்"** என்ற உயரிய கொள்கையைக் கடைப்பிடித்து, தமிழ்நாட்டில் அமைதி, வளம் மற்றும் வளர்ச்சி ஏற்பட

வேண்டுமென்ற இலக்கை எய்திட நான் தொய்வின்றி கடமையாற்றி வருகிறேன்.

“வந்தாரை வாழ வைக்கும் தமிழகம்” என்ற புகழுக்குரிய இம்மாநிலத்தில் பல்வேறு இனம், மதம், சாதி சார்ந்த மக்கள் அனைவரும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களிடையே சாதி, மத பேதமற்ற சூழ்நிலையை உருவாக்கி, தேசிய ஒருமைப்பாட்டைப் பேணிப் பாதுகாத்து, சமூக மற்றும் மத நல்லிணக்கத்தை நிலைநாட்டி, காவல்துறையினர் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர்.

கடந்த ஐந்தாண்டுகளில், தமிழக வரலாற்றில் இல்லாத அளவிற்கு, எனது தலைமையிலான அரசு காவல்துறை நவீனமயமாக்கல், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்றவற்றில் சிறப்பு கவனம் செலுத்தி வந்துள்ளது. காவல் நிலையங்களுக்கு

கட்டடங்கள், மாவட்ட மற்றும் உட்கோட்ட அளவில் காவல்துறை அலுவலகங்கள், காவலர் குடியிருப்புகள், “உங்கள் சொந்த இல்லம்” திட்டத்தின் கீழ் காவல் பணியாளர்களுக்கான வீடுகள் கட்டுவது, வாகன வசதி மேம்பாடு, பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, தொலைத் தொடர்பு வசதிகள், கடலோரப் பாதுகாப்புக் குழுமம், ஊர்க்காவல் படை, தடய அறிவியல் துறை மற்றும் இதர சிறப்புப் பிரிவுகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன.

மாநிலத்தில் அமைதியான சூழல் நிலவிட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து, சட்டத்தை மதித்து நடக்கும் பொது மக்கள் மனதில் எவ்வித அச்ச உணர்வுமின்றி, அவர்தம் அன்றாடப் பணிகளைச் செவ்வனே செய்வதற்கு காவல்துறை உறுதி செய்துள்ளது.

## II நிருவாக அமைப்பு

காவல்துறையில் 01.04.2016—ன்படி, ஏற்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 1,21,215 ஆகும். தமிழ்நாடு அரசின் உள்துறையின் கீழ் காவல்துறை இயங்கி வருகிறது. காவல்துறை தலைமை இயக்குநர், சட்டம்—ஒழுங்கு, மாநில காவல்துறையின் தலைவராவார். தமிழக காவல்துறையானது நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு காவல்துறை தலைவரின் கீழ் செயல்பட்டு வருகிறது. இம்மண்டலங்கள் காவல்துறை துணைத் தலைவரின் தலைமையில் 11 சரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஏழு ஆணையரகங்கள் காவல்துறை இயக்குநர்/ காவல்துறைத் தலைவர்/காவல்துறை துணைத் தலைவர் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இரண்டு இரயில்வே காவல் மாவட்டங்கள் உட்பட,

33 மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு காவல் கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. 244 காவல் உட்கோட்டங்கள், காவல் உதவி கண்காணிப்பாளர்கள் அல்லது காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் தலைமையில் உள்ளன. 200 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 266 போக்குவரத்துக் காவல் நிலையங்கள் மற்றும் 27 புறக்காவல் நிலையங்கள் உட்பட மொத்தம் 1,827 காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

காவல்துறையில் உள்ள பல்வேறு சிறப்புப் பிரிவுகள் குறிப்பிட்ட முக்கிய பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அவை, நுண்ணறிவுப் பிரிவு, குற்றப்பிரிவு, பொருளாதார குற்றங்கள் தடுப்புப் பிரிவு, சிறப்பு செயலாக்கப் பிரிவு, சிறப்பு இலக்குப் படை, தொழில்நுட்பப் பிரிவு, சமூக நீதி மற்றும் மனித உரிமைப் பிரிவு, ஆயுதப் படை, கடலோர பாதுகாப்புக் குழுமம், மதுவிலக்கு

அமலாக்கப் பிரிவு, குடியுரிமை பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படை மற்றும் மாநில குற்ற ஆவணக் காப்பகம் ஆகியவையாகும்.

## III சட்டம் – ஒழுங்கு

தொழில், வணிகம் மற்றும் கட்டமைப்பு வசதி மேம்பாடு ஆகியவற்றில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு, அமைதியான மற்றும் பாதுகாப்பான சூழல் அவசியமாகிறது. எனவே, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பொது அமைதி பராமரிப்பு என்பது முக்கிய கிரியா ஊக்கியாக செயல்படுகிறது. தமிழ்நாட்டில் அமைதியான சூழலே நிலவி வருகிறது. அவ்வப்போது, பல்வேறு பிரச்சனைகளை முன்னிறுத்தி, அரசியல் கட்சிகள், சாதி, வகுப்புவாத மற்றும் இதர இயக்கங்கள் போராட்டங்கள் நடத்தியபோது, வன்முறை அல்லது பொது அமைதிக்குப் பங்கம்

ஏற்படாத வகையில் அப்போராட்டங்கள் திறமையாகக் கையாளப்பட்டன. புது தில்லியில் உள்ள காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு கூடத்தினர் மேற்கொண்ட ஆய்வின்படி, தமிழ்நாட்டில் அதிகப்படியான போராட்டங்கள் நடைபெற்றுள்ளன எனவும், இது நாட்டின் ஒட்டுமொத்த எண்ணிக்கையில், 25 விழுக்காட்டிற்கும் அதிகமாகும் எனவும் தெரிய வருகிறது. அதே வேளையில், போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த, காவல் துறையினர் பலப்பிரயோகம் செய்த நிகழ்வுகள், அகில இந்திய அளவில் ஒப்பிடும்போது, 0.5 சதவிகிதத்திற்கும் குறைவாகும். ஒவ்வொரு நாளும் சராசரியாக 60 போராட்டங்கள் நடைபெறும் நிலையிலும், பொது மக்கள் தங்களது குறைகளை வெளிப்படுத்த, பொது இடங்களில் கூட்டங்கள், பேரணிகள் நடத்தும் ஜனநாயக மற்றும் அரசியலமைப்பு உரிமைகளை அனுமதிக்கும் அதே வேளையில் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு

எவ்வித குந்தகமும் ஏற்படாவண்ணம் தமிழக காவல்துறையினர் செயல்பட்டு, அமைதியைப் பேணிக் காத்துள்ளனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வு, பூரண மதுவிலக்கு அமலாக்கம், ஜல்லிக்கட்டு போட்டிகளைத் தடை செய்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல், காவேரி ஆற்றின் குறுக்கே அணைகள் கட்ட கர்நாடக அரசு எடுத்த முயற்சி, மீத்தேன் வாயு எடுப்பதற்காகப் பாசன மாவட்டங்களில் ஆழ்துளை கிணறுகள் தோண்டுதல் தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகள் போராட்டங்கள் நடத்தின. தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக அப்போராட்டங்கள் சுமுகமாகக் கையாளப்பட்டன.

ஆண்டுதோறும், பல்வேறு சாதிகளால் அடையாளப்படுத்தப்படும் புகழ் பெற்ற மற்றும் தற்கால தலைவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாள் அனுசரிக்கப்படும் நிகழ்வுகள் மற்றும் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படும் சாதி மற்றும் வகுப்பு குழுக்களுடன் தொடர்புடைய நிகழ்வுகள் பெரும் கூட்டத்தைக் கவரக்கூடியதாக உள்ளன. இந்த நிகழ்வுகள் நடைபெறும் குறிப்பிட்ட இடங்களில் கூடுவதற்காக நீண்ட தூரம் மக்கள் பயணம் மேற்கொள்கிறார்கள்.

கடந்த ஆண்டுகளில், இதுபோன்ற நிகழ்வுகளின்போது, வன்முறை, சொத்துக்களுக்குச் சேதம் மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பாதிப்புகள் ஏற்பட்டன. 2013–ஆம் ஆண்டிலிருந்து, பிற மாவட்டங்களிலிருந்து வாடகை வாகனங்களில் வருவது தடை செய்யப்பட்டது உள்ளிட்ட சில வழிமுறைகன் அறிமுகப்படுத்தியதன் விளைவாக

அசம்பாவித சம்பவங்கள் ஏதுமின்றி, அனைத்து நிகழ்ச்சிகளும் அமைதியாக நடைபெற ஏதுவானது.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் **13.02.2016** முதல் **22.02.2016** வரை நடைபெற்ற மகாமகத் திருவிழாவில் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் பொது மக்களுக்கு உதவுவதற்கும் ஏதுவான வகையில், எனது அரசால் விரிவான காவல் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் காரணமாக மகாமகம் மிக அமைதியான முறையில் நடந்து முடிந்தது. இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள், எந்த வித அசம்பாவித நிகழ்வையும் தடுக்கும் வகையில் **36** தற்காலிக காவல் நிலையங்கள் மற்றும் **83** புறக்காவல் நிலையங்கள் அமைத்தது, கோவிலைச் சுற்றியுள்ள பல்வேறு முனையங்களில் **400** உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி கேமராக்கள் பொருத்தப்பட்டது,

போக்குவரத்து மற்றும் ஆம்புலன்ஸ் வசதிகள் செய்யப்பட்டதுடன் மருத்துவ முகாம்கள் மற்றும் தீயணைப்பு சாதனங்கள் தயார் நிலையில் இருந்தது ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். நுண்ணறிவுப் பிரிவு மற்றும் காவல் இளைஞர் படையினர் உள்ளிட்ட காவல் ஆளிநர்கள் இவ்விழா சிறப்பாக நடந்து முடிவதற்கான பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மகாமகம் குளத்தில் சுமார் 30.3 லட்சம் பக்தர்கள் புனித நீராடினர். சுமார் 50 லட்சம் பக்தர்கள் நகரிலுள்ள பல்வேறு கோவில்களில் வழிபாடு செய்தனர்.

## (அ) <u>காவல் சீர்திருத்தச் சட்டம், 2013</u>

எனது அரசு, தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டம், 2013–ஐ இயற்றியது. மாநில பாதுகாப்பு ஆணையம், காவல் நிர்வாக வாரியம், மாநில காவல் புகார்கள் ஆணையம், மாவட்ட புகார்கள் ஆணையம் மற்றும் காவல் புகார்கள் பிரிவு, காவல்

நிலைய அளவில் சட்டம்–ஒழுங்கு மற்றும் புலனாய்வு பிரிவுப் பணிகளைப் பிரித்தல், குறிப்பிட்ட பதவிகளுக்குக் கால நிர்ணயம் செய்தல் ஆகிய புது அம்சங்கள் இந்தச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டமானது, பிரகாஷ் சிங் மற்றும் பலர் (இந்திய அரசு மற்றும் பலருக்கு எதிராக) தாக்கல் செய்த நீதிப்பேராணை (உரிமையியல்) மனு எண்.310/1996–ல் உச்சநீதிமன்றம் பிறப்பித்த வழிகாட்டுதலின்படி இயற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டம், 2013 தமிழக அரசின் அரசிதழில் 08.11.2013 அன்று வெளியிடப்பட்டது.

## (ஆ) <u>காவல் பாதுகாவலின்போது ஏற்பட்ட மரணங்கள்</u>

2015–ஆம் ஆண்டில், காவல் பாதுகாப்பின்போது நிகழ்ந்ததாக மூன்று மரண சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 176(1–A)–ன்படி, இவ்வழக்குகள் மீதான விசாரணை நடத்தும் பொறுப்பு நீதித்துறை குற்றவியல் நடுவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட மூன்று வழக்குகளும் நீதித்துறை குற்றவியல் நடுவர்களால் விசாரிக்கப்பட்டு, அவர்களது அறிக்கையின் பேரில், அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். காவல் நிலைய மரணங்கள் மற்றும் சித்தரவதை செய்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்காகக் கூருணர்ச்சி மற்றும் பயிற்சி அளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது. இதன் விளைவாக, 2014–ஆம் ஆண்டில் 8–ஆக இருந்த மரண சம்பவங்கள் 2015–ஆம் ஆண்டில் 3–ஆகக் குறைந்துள்ளது. பொதுமக்களைப் பாதுகாப்பதுதான் காவல்துறையினரின் கடமையே தவிர வேறு அல்ல என்ற கொள்கையில் எனது அரசு திடமாக உள்ளது.

மேலும், காவல் பணியாளரின் தவறான நடத்தையில் முகாந்திரம் இருப்பதாகத் தெரிய வந்தால், பாதிக்கப்பட்ட நபரின் வாரிசுக்கு அரசு ரூ.1 லட்சம் இழப்பீடாக வழங்குகிறது. அதுமட்டுமன்றி, இவ்வழக்குகளில் உயர்நீதிமன்ற வழிகாட்டுதல் அல்லது தேசிய மனித உரிமை ஆணையத்தின் பரிந்துரையின்பேரில், அதிக அளவிலான இழப்பீட்டுத் தொகையும் அரசால் வழங்கப்படுகிறது.

பிரேதப் பரிசோதனைச் செய்வதற்கு, மருத்துவர் குழுவைப் பயன்படுத்துதல், பிரேத பரிசோதனையைக் காணொலிக் காட்சி மூலம் பதிவு செய்தல் உள்ளிட்ட பல வழிகாட்டு நெறிமுறைகளைத் தேசிய மனித உரிமைகள் ஆணையம் வகுத்துள்ளது. இத்தகைய வழிகாட்டு நெறிமுறைகள் தவறாமல் பின்பற்றப்படுவதோடு, தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின்

வழிமுறைகளின்படி தொடர்புடைய அறிக்கைகளும் அவ்வாணையத்திற்கு அனுப்பப்படுகின்றன.

## (இ) காவல் துப்பாக்கிச் சூடு

கடந்த சில ஆண்டுகளாகக் காவல் துப்பாக்கிச் சூடு சம்பவங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் காணலாம்:–

| வரிசை எண் | வருடம் | துப்பாக்கிச் சூடு சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2006 | 17 |
| 2 | 2007 | 13 |
| 3 | 2008 | 17 |
| 4 | 2009 | 8 |
| 5 | 2010 | 12 |
| 6 | 2011 | 6 |
| 7 | 2012 | 7 |
| 8 | 2013 | 8 |
| 9 | 2014 | 2 |
| 10 | 2015 | 2 |

2006 முதல் 2010–ஆம் ஆண்டு வரையிலான காலங்களில், ஆண்டொன்றுக்குச் சராசரியாக 13 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இது 2011 முதல் 2015–ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 5–ஆகக் குறைந்துள்ளது. 2015–ஆம் ஆண்டு நிகழ்ந்த இரண்டு காவல் துப்பாக்கிச் சூடு சம்பவங்களில், ஒன்று குற்றச் செயல்களில் ஈடுபட்டோர் மீதும் மற்றொன்று கலவரத்தைக் கட்டுப்படுத்தவும் நடத்தப்பட்டவையாகும். உயிர் மற்றும் சொத்துக்களைப் பாதுகாக்க வேறு வழியின்றி, நிலைமை கட்டுக்கடங்காமல் போகும்பட்சத்தில் மட்டுமே, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட வேண்டுமென தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## IV குற்ற நிலவரம்

### (அ) சொத்து தொடர்பான குற்றங்கள்

தமிழ்நாட்டில், 2015–ஆம் ஆண்டில், 18,290 சொத்து தொடர்பான வழக்குகளும், 2014–ஆம் ஆண்டில் 19,432 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 5.9 விழுக்காடு குறைவாகக் காணப்படுகிறது (பிற்சேர்க்கை–I). பதிவான 18,290 வழக்குகளில், 12,890 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2013–2015 ஆம் ஆண்டுகளில், பதிவான வழக்குகள் மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விவரம் விளக்கப்படம்–I ல் தரப்பட்டுள்ளது. 2015–ஆம் ஆண்டில், களவு போன ரூ.131.15 கோடி மதிப்புள்ள

சொத்துக்களில், ரூ.85.79 கோடி சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன (பிற்சேர்க்கை–II).

## (ஆ) இந்திய தண்டனைச் சட்ட வழக்குகள்

2015–ஆம் ஆண்டில், இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் குற்ற விகிதம் குறைந்து காணப்படுகிறது (பிற்சேர்க்கை–III). கடந்த மூன்று ஆண்டுகளில், கொலை, கொலை முயற்சி, கொடூர தாக்குதல், வன்முறைக் கலவரம் போன்ற கொடுங்குற்றங்களுக்காகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், புலன் விசாரணையிலுள்ள வழக்குகள், பிற வழிகளில் தீர்த்து வைக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள் பிற்சேர்க்கை–IV-ல் தரப்பட்டுள்ளது. குடும்பத் தகராறு, காதல் விவகாரங்கள் / பாலின ரீதியிலான சம்பவங்கள், சிறு /

வாய்த் தகராறு, முன் விரோதம், நிலத் தகராறு போன்றவை பிற்சேர்க்கை–V–ல் கண்டுள்ளபடி, 2015–ஆம் ஆண்டில் நிகழ்ந்த கொலைச் சம்பவங்களுக்குக்கான பிரதான காரணங்களாகத் தொடர்ந்து இருந்து வருகின்றன. 2015–ஆம் ஆண்டில் நிகழ்ந்த கொலைச் சம்பவ வழக்குகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. தடையின்றி வழக்குகளைப் பதிவு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்படுவதுடன், இவ்வாறு பதிவு செய்யப்படும் வழக்குகளில் தேவையான தொடர் புலன் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்வதும் உறுதி செய்யப் படுகிறது.

## (இ) <u>பெண்களுக்கு எதிரான குற்றங்கள்</u>

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் என்ற தலைப்பின் கீழ், பாலியல் பலாத்காரம், வரதட்சணை இறப்பு, கணவர் மற்றும் அவரது

உறவினர்களால் கொடுமை, மானபங்கம் போன்ற குற்றங்களுக்கு 2015–ஆம் ஆண்டில் 3,578 வழக்குகளும், 2014–ஆம் ஆண்டில் 3,771 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இக்குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து காணப்படுகிறது (பிற்சேர்க்கை–VI). 2013–2015ஆம் ஆண்டுகளில், பதிவான வழக்குகள், குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், புலன் விசாரணையிலுள்ள வழக்குகள், பிற வகையில் தீர்த்து வைக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விவரம் பிற்சேர்க்கை–VII ல் தரப்பட்டுள்ளது. இது தவிர, பாலியல் குற்றங்களிலிருந்து சிறார்களைப் பாதுகாத்தல் சட்டம், 2012–ன் கீழ், 1,544 வழக்குகள் 2015–ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டன. அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் உள்ள ஆலோசனை மையங்கள், மகளிர் உதவி சேவை / சிறார் உதவி சேவை அரசு

சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர சேவை அமைப்புகள் மூலமாக பொது மக்களுக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் சிறார்களுக்கு அவர்களது சட்ட உரிமை குறித்து கற்பித்து, எனது அரசு தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. 2015–ஆம் ஆண்டில், பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் கட்டுப்படுத்தவும், குறைக்கவும் இது போன்ற நடவடிக்கைகள் மிகவும் உதவிகரமாக இருந்தன.

2015–ஆம் ஆண்டில், கற்பழிப்பு வழக்குகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. 2014–ஆம் ஆண்டில், 471 வழக்குகளும், 2015–ஆம் ஆண்டில், 450 வழக்குகளும் பதிவாகியுள்ளன.

## (ஈ) <u>கொடுங்குற்றங்கள் தடுப்புப் பிரிவு</u>

எனது அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் கொடுங்குற்றங்களைக் கண்காணிப்பதற்காக ஒரு சிறப்புப் பிரிவை உருவாக்கும் புதிய முயற்சியினை மேற்கொண்டுள்ளது. **06.08.2014** அன்று, காவல் துறை மானியக் கோரிக்கையின் போது, வெளியிடப்பட்ட எனது அறிவிப்பின் பேரில், கொடுங்குற்றங்கள் தடுப்புப் பிரிவு என்ற சிறப்புப் பிரிவு **20** மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவின் செயல்பாட்டிற்காகவும் ரூபாய் மூன்று லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**<u>கொடுங்குற்றத் தடுப்புப் பிரிவினரின் பணிகள் பின்வருமாறு</u>**

**(1)** கொலை, கற்பழிப்பு, ஆட்கடத்தல் / பணத்திற்காக ஆட்கடத்தல் போன்ற வழக்குகளில் குற்றவாளிகள் யாரெனத் தெரியாத நிலையில், புலன் விசாரணை மேற்கொள்ளுதல்.

(2) சம்பந்தப்பட்ட காவல் ஆணையர் / மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின்பேரில் பிற மிகக் கொடுங்குற்றங்களில் புலன் விசாரணை மேற்கொள்ளுதல்.

(3) இப்பிரிவினர் கையாளும் அனைத்து வழக்குகளிலும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுத்தல்.

## (உ) <u>தமிழ்நாடு சட்டம் 19 மற்றும் 20/2014</u>

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில், 1982–ஆம் ஆண்டைய தமிழ்நாடு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்து சரக்கு குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 14/1982) திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு,

தமிழ்நாடு சட்டம் 19 மற்றும் 20/2014 இயற்றப்பட்டது. இச்சட்டத்திருத்தம் 03.09.2014 நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் எண்.175–ல் வெளியிடப்பட்டது.

2014–ஆம் ஆண்டைய தமிழ்நாடு சட்டம் 19–ல், 1982–ஆம் ஆண்டைய தமிழ்நாடு சட்டம் 14–ன் பிரிவு 2(f)–ல் இருந்த ‘habitually’ என்ற வார்த்தை நீக்கப்பட்டது. ‘Cyber Law Offender’ என்ற வார்த்தை பிரிவு 2(bb) ஆகச் சேர்க்கப்பட்டது.

2014–ஆம் ஆண்டைய தமிழ்நாடு சட்டம் 20–ல் ‘Sexual Offender’ என்ற வார்த்தை பிரிவு 2(ggg) ஆகச் சேர்க்கப்பட்டது.

13.10.2014 முதல், தமிழ்நாடு சட்டம் 19 மற்றும் 20/2014 அமலுக்கு வந்தது.

# V **சாலை விபத்துக்கள்**

## (அ) **சாலை விபத்து குறித்த புள்ளி விவரங்கள்**

**2015**–ஆம் ஆண்டில் தாக்கலான **14,524** உயிர் இழப்பு ஏற்படுத்திய சாலை விபத்துகள் உட்பட **69,059** சாலை விபத்துக்களில், **15,642** பேர் இறந்துள்ளனர். **2014**–ஆம் ஆண்டில் தாக்கலான **14,165** உயிர் இழப்பு ஏற்படுத்திய சாலை விபத்துகள் உட்பட **67,250** சாலை விபத்துக்களில், **15,190** பேர் இறந்துள்ளனர். **2015**–ஆம் ஆண்டில், வாகனங்களின் எண்ணிக்கை **15.63** லட்சம் அதிகரித்துள்ளது. **01.01.2016** அன்றைய நிலவரப்படி, தமிழ்நாட்டில் **2.16** கோடி வாகனங்கள் உள்ளன. ஒவ்வோர் ஆண்டும் வாகன எண்ணிக்கை பெருகி வரும் போதிலும், வாகன எண்ணிக்கை மற்றும் சாலை விபத்துக்களின் எண்ணிக்கைக்கு இடையேயான

விகிதாச்சாரமானது **2013**–ஆம் ஆண்டிலிருந்து, **2015**–ஆம் ஆண்டு வரை குறைந்து வருவது காணப்படுகிறது. அதேபோன்று, வாகனங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது உயிரிழப்பு விபத்துக்கள், உயிரிழப்புகள் மற்றும் உயிரிழப்பில்லா விபத்துக்களுக்கான விகிதாச் சாரங்களும் குறைந்துள்ளன. சாலை விபத்துக்களின் எண்ணிக்கை, உயிரிழப்பு சம்பவங்களின் எண்ணிக்கை, வாகன எண்ணிக்கையின் விகிதாச்சார விவரங்கள் பிற்சேர்க்கை–VIII முதல் X வரை தரப்பட்டுள்ளன.

## (ஆ) சாலை விபத்து தரவு மேலாண்மை முறை

உலக வங்கியின் உதவியுடன் கூடிய தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ள, இந்தச் சாலை விபத்து தரவு மேலாண்மை முறை, சாலை

விபத்துகள் குறித்த தரவுகளைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்வதற்கு ஏதுவாகிறது. சாலை விபத்து குறித்த தங்கள் துறை சார்ந்த தகவல்களைப் பதிவு செய்ய காவல்துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை ஆகிய துறைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**ஆர்.ஏ.டி.எம்.எஸ். பாதீடு** (RADMS Server) **மேம்படுத்தப்பட்டது:** எல்காட் நிறுவனத்திடமிருந்து ஆர்ஏடிஎம்எஸ் பாதீடு வாங்குவதற்கென ரூ.82.00 லட்சம் ஒப்பளிக்கப் பட்டது. இது, அந்த மென்பொருளில் கூடுதல் வசதிகளை நிறுவுவதற்கும் மற்றும் ஆர்ஏடிஎம்எஸ் தரவு தளத்திலிருந்து மிக விரைவாக தகவல் பெறுவதற்கும் வழிவகை செய்யும். இதனை நிறுவும் பணி முழுமை பெற்று விட்டது.

## (இ) நெடுஞ்சாலை ரோந்து வாகன கண்காணிப்பு முறை

தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில், தற்போது 272 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் இயங்கி வருகின்றன. இவ்வாகனங்கள் அனைத்திலும் புவிசார் இருப்பிட முறைமை (GPS) கருவி பொருத்தப்பட்டு, மாவட்டங்களில் உள்ள காவல் கட்டுப்பாட்டு அறைகளில் இருந்தபடியே, இவ்வாகனங்களின் இருப்பிடம் கண்காணிக்கப்படுகிறது. நெடுஞ்சாலைகளில், விபத்துக்கள் நிகழும்போது, இந்த ரோந்து வாகனங்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பணியாற்றுகின்றன. மாநிலம் முழுவதும் கடந்த ஆண்டு காயமடைந்த 25,487 நபர்கள் மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். 2015–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், 2016–ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை,

சரியான நேரத்தில் பணியாற்றியதன் காரணமாக, 16,667 உயிர்கள் காப்பாற்றப் பட்டுள்ளன. மாநில போக்குவரத்து திட்டமிடல் பிரிவானது, தொடர்புடைய அமைப்பினருடன் ஒருங்கிணைந்து சாலை பாதுகாப்பு கருத்தரங்குகள், தொழிற்பட்டறைகள் போன்றவற்றை நடத்துவதோடு, ஊடகங்கள், கம்பிவடத் தொலைக்காட்சி, அர்ப்பணிப்புடன் கூடிய அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன், சாலை விதிகள் குறித்து சாலையைப் பயன்படுத்துவோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

**(ஈ) <u>போக்குவரத்துக் காவல் நிலையங்கள் உருவாக்கம்</u>**

எனது அறிவிப்பிற்கிணங்க, தருமபுரி மாவட்டத்தில் அரூர் மற்றும் பென்னாகரம் ஆகிய இடங்களில் இரண்டு போக்குவரத்துக் காவல்

நிலையங்களை உருவாக்கிட அரசாணை (நிலை) எண்.972, உள் (காவல்–14) துறை, நாள் 28.12.2015–ன்படி ரூ.1.51 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டது. மேலும், அரசாணை (நிலை) எண்.973, உள் (காவல்–14) துறை, நாள் 28.12.2015–ன்படி நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணியில் ஒரு போக்குவரத்துக் காவல் நிலையத்தை உருவாக்குவதற்காக எனது அரசு ரூ.76.87 லட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

## VI <u>காவல்துறை நவீனமயமாக்கல்</u>

### (i) ஒன்றுபட்ட உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழு திட்டம்

அமைச்சுப் பணியாளர்கள் உள்ளிட்ட 1.20 லட்சம் தமிழ்நாடு காவல் பணியாளர்களுக்கு ஒன்றுபட்ட உள்சுற்று தொலைப்பேசி பயன்படுத்துவோர் குழு திட்டத்தினை

அமல்படுத்த எனது அரசு ரூ.3.47 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. இதுவரையில், 1.08 லட்சம் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் உறுப்பினர் குறியீட்டு அட்டைகள் (SIM card) வழங்கப்பட்டுள்ளன. 2,409 நிரந்தர கம்பியில்லா தொலைபேசி சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், காவல் துறை பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் அதிகபட்சமாக ஏழு உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழு உறுப்பினர் குறியீட்டு அட்டைகளைப் பெற்றுக் கொள்ள இத்திட்டத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. இதுவரையில், 3.26 லட்சம் பிஎஸ்என்எல் குடும்ப உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோருக்கான குறியீட்டு அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன.

### (ii) ஒன்றுபட்ட உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழுவுக்கான தரவு தள கைப்பேசி செயலிகள்

காவல் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கைப்பேசி எண்கள் அவரவர் பெயரிலேயே ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. எனவே ஓய்வு பெறும் வரை காவலர் அதே எண்ணை பயன்படுத்துகின்றனர். காவல் பணியாளர்கள் / காவல் நிலையங்களுக்கான முழுமையான ஒன்றுபட்ட உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழுவுக்கான கைப்பேசி எண்களின் தரவு தளத்தை ஏற்படுத்தவும், விரைவாக தரவு தளத்திலிருந்து எண்ணை மீட்கவும், ஆன்ட்ராய்டு மற்றும் ஐ.ஓ.எஸ். தளங்களில் இயங்கும் ஸ்மார்ட் போன்களில் பயன்படுத்துவதற்கென, தமிழ்நாடு காவல்துறையின் விரிவான உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழு தரவு தளத்தை காவல் துறையில் உள்ள தொழில்நுட்ப

குழுவினரே உருவாக்கியுள்ளனர். அந்தக் கைப்பேசி செயலிகள் கூகுள் ப்ளேஸ்டோர் மற்றும் ஆப்பிள் ஸ்டோரில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. கைப்பேசி எண்களை எளிதாகத் தெரிந்து கொள்ளும் வசதியுடன் கூடிய ஸ்மார்ட் போன்களில் முழுமையான ஒன்றுபட்ட உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழுவுக்கான தரவு தளத்தைச் சேமித்துக் கொள்ள இச்செயலி வழிவகை செய்கிறது.

## (iii) உள்சுற்றுக் கண்காணிப்புத் தொலைக்காட்சி முறை கேமரா சாதனங்கள் அமைத்தல்

எனது அரசு பொதுப் பாதுகாப்பிற்கென உள்சுற்றுக் கண்காணிப்புத் தொலைக்காட்சி முறை கேமரா சாதனங்கள் அமைப்பதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது.

அரசாணை (நிலை) எண்.193, உள் (நவீனமயமாக்கல்) துறை, நாள் 25.02.2015–ன்படி சேலம் நகரத்தில் 56 இடங்களில் 200 உள்சுற்றுக் கண்காணிப்புத் தொலைக்காட்சி முறை கேமரா சாதனங்களை ரூ.3.51 கோடி செலவில் அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தஞ்சாவூர் மற்றும் கும்பகோணத்தில் உள்ள நவீன கட்டுப்பாட்டு அறைக்கென 200 உள்சுற்றுக் கண்காணிப்புத் தொலைக்காட்சி முறை கேமரா சாதனங்களை ரூ.3.32 கோடி செலவில் அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இராமேஸ்வரம் கோவில் மற்றும் ஏர்வாடி தர்காவில், பொது மக்கள் மற்றும் பக்தர்களின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்கென, 114 உள்சுற்றுக் கண்காணிப்புத் தொலைக்காட்சி முறை கேமரா சாதனங்களை ரூ.3.11 கோடி செலவில் அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

அரசாணை (நிலை) எண்.590, உள் (காவல்–11) துறை, நாள் 10.08.2015–ன்படி பாதுகாப்புத் தேவையைக் கருதி கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் திருப்பூர் நகரங்களிலுள்ள காவல் ஆணையரகத்திற்கென, ஒவ்வொன்றிலும், 8 கேமராக்கள் மற்றும் உபகரணங்கள் கொண்ட நகரும் உள்சுற்றுக் கண்காணிப்புத் தொலைக்காட்சி முறை அலகுகளை ரூ.1.85 கோடி செலவில் அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதன் மூலம் கள அலகுகளின் தேவைக்கேற்ப, முக்கிய இடங்களில் நகரும் கண்காணிப்பு வசதியை வழங்க இயலும்.

**(iv) அதிஉயர் அலைவரிசை தகவல் தொடர்பு கருவிகள் கொள்முதல்**

காவல்துறை நவீனமயமாக்கலின் கீழ் அதிஉயர் அலைவரிசை நிலைக் கருவிகள்– 777, அதிஉயர் அலைவரிசை நகரும் கருவிகள்–1,018,

அதிஉயர் அலைவரிசை கையடக்கக் கருவிகள்–3,480 ஆகியன களப் பிரிவுகளுக்கென வாங்கப்பட்டுள்ளன.

**<u>2015– ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள்</u>**

எனது அறிவிப்புகளுக்கிணங்க, காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட புதிய முயற்சிகளுக்காக அரசாணை (நிலை) எண்.875, உள் (நவீனமயமாக்கல்) துறை, நாள் 07.12.2015–ன்படி நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(அ) **அதிஉயர் அலைவரிசை தகவல் தொடர்பு கருவிகள் வாங்குதல்:** 773 அதிஉயர் அலைவரிசை நிலைக் கருவிகள், 1,000 அதிஉயர் அலைவரிசை நகரும் கருவிகள், 1,000 அதிஉயர் அலைவரிசை கையடக்கக் கருவிகள் மற்றும் 10 அதிஉயர் அலைவரிசை மறுஅஞ்சல் கருவிகள்

ஆகியவற்றை ரூ.8.57 கோடி செலவில் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**(ஆ) 105 காவல் நிலையங்களுக்கான சாதனங்களின் தொகுப்பு வாங்குதல்:** 35 இலகுவகை காவல் நிலையங்கள், 35 நடுத்தர வகை காவல் நிலையங்கள் மற்றும் 35 கனவகை காவல் நிலையங்களுக்கான சாதனங்களின் தொகுப்பை ரூ.10.98 கோடி செலவில் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**(இ) காவல் ஆளிநர்களின் பாதுகாப்பு, இரகசிய கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ள நவீன சாதனங்கள் வாங்குதல்:** நேரியல் அல்லாத சந்தி கண்டுபிடிக்கும் கருவிகள் (Non Linear Junction Detectors)–3, வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்கும் கருவிகள் (Explosive

Vapour Detectors)-4, ஊடு கதிர் மூலம் கண்டறியும் கருவிகள் (X-Ray Baggage Scanners)–4, ஆழமாகப் புதைக்கப்பட்டக் கண்ணி வெடிகளைக் கண்டுபிடிக்கும் கருவிகள் (Deep Search Mine Detectors)–4, வாயிற்படி உலோக கண்டுபிடிப்பிற்கான கருவிகள் (Multi Zone Door Frame Metal Detectors)–15, குண்டு துளைக்காத பொதியுறைகள் (Bullet Proof Jackets)–200, குண்டு துளைக்காத தலைக்கவசங்கள் (Bullet Proof Helmets)–150, எண்ம முறை குரல் பதிவு சாதனங்கள் (Digital Voice Recorders)–25, மூன்றாம் தலைமுறை இரவு நேர கண்காணிப்பு தொலைநோக்கு கருவிகள் (Night Vision Binoculars (Generation-3))–5, உயிர்காப்பு பொதியுறைகள் (Life Jackets)–195,

கையடக்க உலோகக் கண்டுபிடிப்பு சாதனங்கள் (Hand Held Metal Detectors)–55, மற்றும் வெடி குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் போது அணியும் உடைகள் (Bomb Suits)–3 ஆகியவற்றை ரூ.5.46 கோடி செலவில் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**(ஈ) கலவரங்களைக் கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபடும் காவலர்களுக்கான சாதனங்கள்:**

கலவரங்களைக் கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபடும் காவலர்களுக்கான உடற் கவசங்கள் (RIOT Equipment - Body Protectors)–1,493, கலவரக்காரர்களிடம் இருந்து காவலர்களைப் பாதுகாக்கும் பாலி கார்பனேட் கேடயங்கள் (RIOT Equipment – Poly Carbonate Shields)–1,495, பாலி கார்பனேட் லத்திகள் (RIOT Equipment – Poly Carbonate Lathis)–1495,

செயற்கையிழை தயாரிப்பு பிளாஸ்டிக் தலைக் கவசங்கள் (RIOT Equipment – Fibre Reinforced Plastic (FRP) Helmets)–**1496,** ஆற்றல் வாய்ந்த தேடும் விளக்கு (Search Light)–**50** மற்றும் குறைந்த அளவு மின்சாரத்தில் அதிக ஒளி தரக் கூடிய டார்ச் விளக்குகள் (Light Emitting Diode (LED) Torch Lights)–**100** ஆகியவற்றை ரூ.**95.39** லட்சம் செலவில் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**(உ) 263 காவல் நிலையங்களுக்கு இணையதள முறைமை கேமராவுடன் கூடிய கண்காணிப்பு தொலைக்காட்சி சாதனங்கள் வாங்குதல்:** **263** காவல் நிலையங்களின் செயல்பாட்டைக் கண்காணிப்பதற்காக இணையதள முறைமை கேமராவுடன் கூடிய கண்காணிப்பு தொலைக்காட்சி சாதனங்களை ரூ.**6.31** கோடி

செலவில் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**(ஊ) நுண்ணறிவுப் பிரிவினருக்கான சாதனங்கள்:** தூரத்தில் இருந்து வானொலி அலைகள் மூலம் இயக்கக் கூடிய வெடிகுண்டுகளைச் செயல் இழக்க செய்யும் மேம்படுத்தப்பட்ட இலகுவாக எடுத்துச் செல்லத்தக்க சாதனங்கள் (Mobile / Remote Controlled Improvised Explosive Devices Portable Jammer)–2, இலகுவாக எடுத்துச் செல்லத்தக்க ஆவண ஸ்கேனர்கள் (Portable Document Scanners)–2, நேரியல் அல்லாத சந்தி கண்டுபிடிக்கும் கருவிகள் (Non Linear Junction Detectors)–2, வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்கும் கருவிகள் (Explosive Vapour Detector)-1, சிறிய எண்ம முறை

குரல் பதிவு சாதனங்கள் (Mini Digital Voice Recorders)–**2** மற்றும் குறைந்த அளவு மின்சாரத்தில் அதிக ஒளி தரக் கூடிய டார்ச் விளக்குகள் (Light Emitting Diode (LED) Torch Lights)–**4** ஆகியவற்றை ரூ.**46.97** லட்சம் செலவில் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## VII <u>**நலத் திட்டங்கள்**</u>

### (அ) <u>**தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத்திட்டம்**</u>

தமிழக காவல்துறையில், அரசிதழ் பதிவு பெறாத காவல் பணியாளர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் நன்மைக்காக, தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டம் உருவாக்கப்பட்டது.

**தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரண உதவிகள்**

(1) சந்தாதாரர் இறக்க நேரிட்டால் ரூ.25,000/–மும் சந்தாதாரரின் குடும்பத்தினர் இறக்க நேரிட்டால் ரூ.5,000/–மும் நிவாரண நிதியாக வழங்கப்படுகிறது.

(2) காவல்துறைப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு, நூற்றாண்டு கல்வி உதவித் தொகையாக ரூ.4,200/–லிருந்து ரூ.12,000/– வரை வழங்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் தோராயமாக ரூ.3 கோடி பயன்படுத்தப்படுகிறது.

(3) சந்தாதாரர் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு, சிறப்பு மருத்துவ நிவாரணத் தொகையாக ரூ.15,000/–

பணிக்காலம் முழுமையிலும் மூன்று முறை வழங்கப்படுகிறது.

(4) தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டத்தின் கீழ், அதன் சந்தாதாரர்களுக்கு ரூபாய் நான்கு லட்சம் வரை நிதி உதவி வழங்கும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நோய்களுக்கு, மருத்துவச் சிகிச்சை மேற்கொள்வதற்காக நிதி உதவி வழங்க ஆண்டிற்கு ரூபாய் இரண்டு கோடி தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்ட மத்திய குழுவிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2015–ஆம் ஆண்டில், ரூ.5.43 கோடி தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்ட மாவட்டக் குழுவிலிருந்து எடுத்துப்

பயன்படுத்தப்பட்டு, அதன்மூலம் 581 காவல் பணியாளர்கள் பயனடைந்தனர். இந்த ஆண்டில் (30.06.2016 வரை) ரூ.2.95 கோடி பயன்படுத்தப்பட்டு, 293 காவல் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## (ஆ) ஆண்டுதோறும் வழங்கப்படும் அரசு நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

### (i) பரிசுத் திட்டங்கள்

ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் /நகரிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வுகளில் முதல் 10 இடங்களை பெறும் காவல் துறை பணியாளர்களின் பிள்ளைகளுக்குப் பரிசுகள் வழங்கும் நோக்கத்தில் இத்திட்டம்

துவக்கப்பட்டது. இப்பரிசுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:

| வகுப்பு | முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் | 4 முதல் 10 வரை |
|---|---|---|---|---|
| 10 | ரூ.6,500 | ரூ.4,500 | ரூ.2,500 | ரூ.2,000 |
| 12 | ரூ.7,500 | ரூ.5,500 | ரூ.3,500 | ரூ.2,500 |

2015–2016–ஆம் கல்வி ஆண்டில், 717 காவல் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு ரூ.22,76,000/–வழங்கப்பட்டுள்ளது.

**(ii) தமிழ்நாடு அரசு சிறப்பு கல்வி உதவித்தொகை**

காவல்துறை பணியாளர்களுடைய பிள்ளைகளுக்கு உயர் கல்விக்கென சிறப்பு கல்வி உதவித் தொகையைத் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்படி, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவ, மாணவியருக்குத் தலா

ரூ.20,000/— அல்லது கல்வி நிறுவனங்களில் செலுத்தப்படும் கட்டணம், இவற்றில் எது குறைவானதோ, அத்தொகை நான்கு வருட காலத்திற்கு அல்லது அப்படிப்பு முடியும் வரை வழங்கப்படுகிறது. உயர் கல்விக்கான இந்தச் சிறப்பு உதவித் தொகை ரூ.20,000/—லிருந்து ரூ.25,000/—ஆக உயர்த்தப்பட்டு, விடுதிக் கட்டணங்களும் சேர்க்கப்பட்டது. 2015—2016—ஆம் கல்வி ஆண்டில், இத்திட்டத்திற்கென முதல் தவணையாக 101 மாணவர்களுக்கு ரூ.22.90 லட்சமும், இரண்டாவது தவணையாக 102 மாணவர்களுக்கு ரூ.20.58 லட்சமும், மூன்றாவது தவணையாக 100 மாணவர்களுக்கு ரூ.21.08 லட்சமும் மற்றும் நான்காவது தவணையாக 100 மாணவர்களுக்கு ரூ.20.18 லட்சமும் வழங்க ஒப்பளிக்கப்பட்டது. ஆக மொத்தம், 403 பிள்ளைகளுக்கு ரூ.84.74 லட்சம் வழங்கப்பட்டது.

## (இ) <u>கருணைத் தொகை வழங்குதல்</u>

காவல் பணியாளர்கள் பணியின்போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு அல்லது துன்பகரமான சூழ்நிலைகளில் சிக்கி உயிரிழக்க நேரிட்டால் அல்லது ஊனம் ஏற்பட்டால் அல்லது காயமடைந்தால், அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் / இழப்புகளுக்கு ஈடு செய்யும் வகையில் **ரூ.10,000/–** முதல் **ரூ.5,00,000/–** வரை அரசால் கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | உயிரிழப்பு | ரூ.5,00,000/- |
| 2 | நிரந்தர ஊனம், இரு கை / கால் மற்றும் முழுமையான பார்வை இழப்பு | ரூ.2,00,000/- |
| 3 | பணியில் ஈடுபட முடியாதவாறு ஒரு கை / கால் / கண்/ பாதம் மற்றும் விரல்கள் இழப்பு | ரூ.1,00,000/- |
| 4 | தீக்காயம் / குண்டடி காயம், பல்வகை எலும்பு முறிவு | ரூ.50,000/- |
| 5 | சிறு காயங்கள் (அனைத்துப் பிரிவினருக்கும்) | ரூ.10,000/- |

2015–2016–ஆம் நிதியாண்டில், ரூ.60 லட்சம் நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

### (ஈ) தமிழ்நாடு காவல் பணியாளர் காப்பீட்டுத் திட்டம்

அனைத்து பதவி நிலைகளிலுள்ள காவல் பணியாளர்கள், தற்போதைய தமிழ்நாடு காவல் பணியாளர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். பணியின்போது, உயிரிழப்பு ஏற்படும் காவல் பணியாளரின் சட்டப்படியான வாரிசுகளும், அவர்களால் நியமிக்கப்படும் நபர்களும், இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவர். இத்திட்டம், காவல் பணியாளர்கள் பணியில் ஈடுபடும்போது, உயிரிழக்கக்கூடிய மற்றும் நிரந்தர ஊனம் அல்லது பகுதியளவு ஊனமடையக் கூடிய நிகழ்வுகளை உள்ளடக்கியதாகும்.

பணியின்போது உயிரிழக்கும் காவலர் முதல் காவல் ஆய்வாளர்கள் வரை ரூபாய் இரண்டு லட்சமும், காவல் துணைக்கண்காணிப்பாளர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரை ரூபாய் நான்கு லட்சமும் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது. உடல் ஊனம் ஏற்பட்டதற்கான காப்பீட்டுத் தொகையானது, ஊனமுற்றலின் அளவிற்கேற்ப வழங்கப்படுகிறது.

2015–2016–ஆம் நிதியாண்டில், ரூ.30 லட்சம் நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**(உ) <u>தமிழ்நாடு காவலர் மருத்துவ நல நிதி</u>**

2015–2016–ஆம் நிதியாண்டில், காவலர் மருத்துவ நல நிதி திட்டத்தின் கீழ் நிலுவையிலுள்ள கோரிக்கைகளைத் தீர்க்கும்

வகையில் ரூ.1.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் 125 காவல் ஆளிநர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

### (ஊ) <u>உணவு மானியத் திட்டம்</u>

காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான காவல் பணியாளர்கள் நியாய விலைக் கடைகளின் மூலம் வாங்கும் அத்தியாவசியப் பொருட்களுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக, அவர்களுக்கு காக்கி நிறத்தில் தனித்தன்மையான குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது. 70,973 காவல் பணியாளர்கள் காக்கி நிற குடும்ப அட்டை மூலம் மானிய விலையில் அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருகின்றனர்.

**(எ) புறநோயாளிகளுக்கான மருத்துவ சேவை மையங்கள் அமைத்தல்**

அரசாணை (நிலை) எண்.707, உள்(காவல்–14) துறை, நாள் 28.10.2011–ன்படி, காவல் பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு பயனளிக்கும் வகையில், 26 ஆயுதப்படை தலைமையிடங்களிலும், 10 தமிழ்நாடு சிறப்பு காவல் படை தலைமையிடங்களிலும், புறநோயாளிகள் மருத்துவ சேவை மையங்கள் அமைக்க எனது அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது. அனைத்து காவல் பணியாளர்களும், அவர்களது குடும்ப உறுப்பினர்களும் இந்த சேவையைப் பெற்று வருகின்றனர்.

**(ஏ) முழு உடல் மருத்துவ பரிசோதனை**

எனது அறிவிப்பின்படி, 40 வயது நிரம்பிய காவல் பணியாளர்களுக்கு ஆண்டிற்கு ஒருமுறை

அரசு மருத்துவமனைகளில் முழு உடல் மருத்துவப் பரிசோதனை கட்டணமில்லாமல் அளிக்கப்பட்டு வருகிறது. அதற்கான உத்தரவு, அரசாணை (நிலை) எண் 142, உள் (காவல்–9) துறை, நாள் 24.02.2014–ல் பிறப்பிக்கப்பட்டது. 2015–ஆம் ஆண்டில், 87 சதவிகித காவல் பணியாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

## (ஐ) <u>தமிழ்நாடு காவல் சிறப்பு அங்காடிகள்</u>

பணியிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற காவல் பணியாளர்கள் / தீயணைப்புத் துறை பணியாளர்கள் மற்றும் சிறைத்துறைப் பணியாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றனர். தற்போது 81,082 குடும்பங்கள் தமிழ்நாடு காவல் சிறப்பு அங்காடிகளால் பயனடைந்து வருகின்றனர்.

எனது அரசு, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், ரூ.7.56 கோடி செலவில், 32 மாவட்ட தலைமையிடங்களிலும் மற்றும் 15 சிறப்புக் காவல் படையணிகளிலும் 47 காவல் சிறப்பு அங்காடிகளைத் துவக்கியுள்ளது.

**(ஒ) <u>தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி</u>**

பணியின்போது உயிரிழக்கும் காவல் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

ஜனவரி, 2015 முதல் ஜுன், 2016 வரையிலான காலத்தில், 344 பயனாளிகளுக்கு ரூபாய் 10.05 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**(ஓ) <u>கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள்</u>**

காவல் பணியாளர் பணியின்போது உயிரிழக்க நேரிட்டால், அவரை இழந்து வாடும் குடும்பத்திலிருந்து தகுதியுடைய மற்றும் சட்டப்படியான வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படுகிறது.

2016–ஆம் ஆண்டில், அரசாணை (2டி) எண். 102, உள் (காவல்–15) துறை, நாள் 19.02.2016–ன்படி 96 அலுவலக உதவியாளர்கள் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கு எனது அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**(ஔ) <u>விருப்புரிமை நிதிக்கான ஒப்பளிப்பு</u>**

அரசாணை (நிலை) எண்.838, உள் (காவல்–1) துறை, நாள் 30.10.2012–ன்படி, காவல் துறைக்குத் தேவையான சாதனங்கள் வாங்குவது உட்பட இதர தேவைகளுக்கென, காவல்துறை

இயக்குநரின் விருப்புரிமை நிதியமாக ரூபாய் ஐந்து கோடி, எனது அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதுமுள்ள பல்வேறு பிரிவுகளுக்காக மொத்தம் **4,315** பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

## VIII <u>பெண் காவலர்கள்</u>

பெண்களின் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், பெண்களின் குறைகளைத் தீர்க்கவும், அவர்களுக்கென பிரத்யேகமாக எனது அரசு **1992**–ஆம் ஆண்டில் முதலாவது அனைத்து மகளிர் காவல் நிலையத்தை அமைத்தது. தற்போது, மாநிலம் முழுவதும் ஒவ்வொரு காவல் உட்பிரிவின் கீழ் ஒரு மகளிர் காவல் நிலையம் என்ற வகையில் **200** அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நாட்டிலுள்ள மொத்த அனைத்து மகளிர் காவல்

நிலைய எண்ணிக்கையில், சுமார் 40 சதவிகிதம் தமிழ்நாட்டில் உள்ளது. மேலும், ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு பெண் சார்பு ஆய்வாளர் மற்றும் இரண்டு பெண் காவலர்கள் பணியாற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், தமிழகத்தில் சில மாவட்டங்களில் பெண்களே காவல் கண்காணிப்பாளர்களாகப் தலைமையேற்றுள்ளனர். தொழில் நுட்ப பிரிவில் பணிபுரியும் சார்பு ஆய்வாளர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் வரையிலான 409 பதவிகளில், 110 பெண் அதிகாரிகள் பணிபுரிகின்றனர். இவர்கள் காவல்துறையின் தனி தொலைத் தொடர்பு வலைப்பின்னல் சாதனங்களின் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அதேபோன்று, தமிழக காவல்துறையின் விரல்ரேகைப் பிரிவில் பணிபுரிபவர்களில் 31 சதவிகிதத்தினர்

பெண்களாவர். நாட்டிலுள்ள அனைத்து பெண் சார்பு ஆய்வாளர்களில் நான்கு பேரில் ஒருவர் தமிழக காவல்துறையில் பணிபுரிகிறார். இந்தியாவிலுள்ள அனைத்து பெண் காவல் ஆளிநர்களில் ஏழு பேரில் ஒருவர் தமிழக காவல் துறையில் பணிபுரிகிறார்.

மாநிலத்திலுள்ள பெண் காவல் பணியாளர்கள், கூட்டத்தினரைக் கட்டுப்படுத்துதல் அல்லது குற்ற விசாரணை மேற்கொள்ளுதல் அல்லது போக்குவரத்தை சீர்செய்தல் போன்ற எந்தப் பணியாக இருந்தாலும் ஆண்களுக்கு இணையாக பணியாற்றுகின்றனர். இவ்வாறான, கடினமான பணிகளில் பெண்கள் தங்கள் தனித்துவத்தை நிலை நிறுத்திக் கொள்ள அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது பெருமைப்படத் தக்கதாகும்.

# IX காவல்துறையில் சிறப்புப் பிரிவுகள்

## அ) குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

1906–ஆம் ஆண்டு, காவல் துறை துணைத் தலைவர் ஒருவரின் மேற்பார்வையில் 37 காவல் பணியாளர்களைக் கொண்ட ஒரு சிறிய அலகாக குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை தொடங்கப்பட்டது. குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது, சிறப்புப் புலன் விசாரணைப் பிரிவு உட்பட, தற்போது கூடுதல் காவல்துறை இயக்குநர் (குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை) தலைமையின் கீழ் சுமார் 879 காவல் பணியாளர்களுடன் செயல்படும் ஓர் அமைப்பாக உள்ளது. குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையில், 37 உட்பிரிவுகளைத் தவிர, 7 திட்டமிட்ட குற்றச் செயல்கள் தடுப்புப் பிரிவுகளும், 4 கள்ளநோட்டுக்களைக் கண்டறியும்

பிரிவுகளும், 6 சிறப்புப் புலன் விசாரணைப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. சிறப்புப் புலன் விசாரணைப் பிரிவு, கணினிசார் குற்றப்பிரிவு, ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவு மற்றும் காவல் ஆராய்ச்சி மையம் ஆகியன இதர சிறப்புப் பிரிவுகளாகும். தமிழக அரசு, தமிழக காவல்துறை தலைமை இயக்குநர் அல்லது சென்னை உயர்நீதிமன்றம் ஒப்படைக்கும் வழக்குகளை புலன் விசாரணை செய்வதே குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையின் முக்கியப் பணியாகும். 2015–ஆம் ஆண்டில், இத்துறையில் ஏற்கெனவே நிலுவையில் உள்ள 191 வழக்குகளுடன், கூடுதலாக 125 வழக்குகள் ஒப்படைக்கப்பட்டன. அவற்றில், 122 வழக்குகளில் புலன் விசாரணை முடிக்கப்பட்டு, இறுதி அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது ஆட்கடத்தல் குற்றங்களை எதிர்கொள்ள முதன்மை அமைப்பாகச் செயல்பட்டு இந்த சமூகத் தீமையை களைந்திட ஒருங்கிணைந்த செயல்பாட்டினைச் செய்து வருகிறது. குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் ஆட்கடத்தல் தடுப்பு பிரிவானது பாதிக்கப்பட்ட இளஞ்சிறார்களை மீட்டு அவர்தம் பெற்றோருடன் சேர்த்து வைக்கும் நோக்கத்தில், மத்திய உள்துறை அமைச்சகத்தால் துவக்கப்பட்டுள்ள "ஆபரேஷன் ஸ்மைல்" என்ற திட்டத்தை மாநிலம் முழுவதிலும் செயல்படுத்தி, கட்டாயப்படுத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு பாதிக்கப்பட்டவர்களையும் மற்றும் குழந்தைத் தொழிலாளர்களையும் மீட்டெடுக்கும் பணியையும் இக்குற்றப் பிரிவு செய்து வருகிறது. "ஆபரேஷன் ஸ்மைல்" திட்டத்தின் கீழ் காணாமற்போன சிறார்களை

மீட்டெடுக்கும் பணியில் மெச்சத்தக்க சேவை செய்ததற்காக மத்திய அரசின், உள்துறை அமைச்சகத்தால், சென்னை, குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் காவல் துணை கண்காணிப்பாளர் ஒருவருக்கு சிறந்த செயல்பாட்டிற்காக சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இளம் பெண்களின் ஆபாசப்படங்கள் அடங்கிய முகநூல் பக்கம் தொடர்பாக அரசு சாரா அமைப்பினர் கொடுத்த புகாரின் கீழ் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குற்றவாளிகள் குண்டர் தடுப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண்.14/1982) கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதுவே, தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 மற்றும் பாலியல் குற்றங்களிலிருந்து சிறார்களைப் பாதுகாக்கும் சட்டம் (POCSO), 2012 ஆகியவற்றின் கீழ் குற்றம் புரிந்ததற்காக ஒரு கணினிசார் குற்றவாளி கைது

செய்யப்பட்டு, தமிழ்நாடு சட்டம் எண்.14/1982 சட்டமானது கணினிசார் குற்றவாளிகளையும் உள்ளடக்கி 2014–ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட பிறகு, அச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் அடைக்கப்படுகிற முதல் வழக்காகும்.

2015–ஆம் ஆண்டில் குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் முயற்சியால், கைப்பேசி சேவை வழங்குவோரின் ஒருங்கிணைப்புடன் கணினி வழிக் குற்றங்களைத் தடுக்கும் வகையிலான விழிப்புணர்வு குறுந்தகவல்கள் பொது மக்களுக்கு அனுப்பப்பட்டன. பரிசுச் சீட்டு பரிசுகள் விழுந்ததாகவும், வேலை வாய்ப்பு தருவதாகவும், இரகசிய தகவல்களைப் பெறுவதற்காகவும் வரக்கூடிய அழைப்புகள் குறித்தும், கைப்பேசி மற்றும் இணையதளம் ஆகியவற்றைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துதல்

குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தக்கூடிய தகவல்கள் அனுப்பப்பட்டன.

**குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் சிறப்பு புலன் விசாரணைப் பிரிவு உருவாக்கம்**

அடிப்படைவாத செயல்களைக் கட்டுப்படுத்தவும், மத அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான வழக்குகளைப் புலன் விசாரணை செய்யவும் சிறப்புப் புலன் விசாரணைப் பிரிவு ஒரு காவல் துறைத் தலைவர் தலைமையில் உருவாக்கப்பட்டது. மிகக் குறுகிய காலகட்டத்திலேயே இந்த சிறப்புப் புலன் விசாரணைப் பிரிவு முக்கிய அடிப்படைவாதிகள் வழக்குகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டது. 1967–ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 25 வழக்குகளில், அரசு சார்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர அனுமதி

பெறப்பட்டு, அந்த வழக்குகள் நீதிமன்ற விசாரணை நிலுவையிலுள்ளன. 8 வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன.

## ஆ) <u>குற்றப்பிரிவு</u>

குற்றப்பிரிவில் கீழ்க்கண்ட அலகுகள் உள்ளன:

### (i) <u>போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு</u>

போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவானது 1985–ஆம் ஆண்டைய போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தை திறம்பட அமல்படுத்தி, அதன் மூலம், போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் மற்றும் புழக்கத்தை முற்றிலும் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது. தற்போது, மாநிலம் முழுவதும் 15 அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

**2015–**ஆம்ஆண்டில், **1,873** வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, **1,938** குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். மேலும், ரூ.**13.42** கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, **28** குற்றவாளிகள் தமிழ்நாடு சட்டம் **14/1982–**ன் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

**<u>போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்</u>**

தமிழ்நாட்டில் போதை மருந்துப் பழக்கத் தீமை மற்றும் கள்ளத்தனமாக கடத்துதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சர்வேதச தினமாக **2016–**ஆம் ஆண்டு ஜூன் மாதம் **26–**ஆம் தேதியன்று சிறப்பான முறையில் அனுசரிக்கப்பட்டது. இதன் மூலமாக போதை மருந்துப் பழக்கத்திற்கு எதிராக அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகளைப் பொது மக்கள் அறிந்து கொள்ளவும் அவற்றைப் பற்றிய

விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது. போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவின் 15 அலகுகளும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தங்கள் சம்பந்தப்பட்ட தலைமையிடங்களில் நடத்தின. மாவட்ட ஆட்சியாளர்கள், காவல் கண்காணிப்பாளர்கள், மாணவ சமூகத்தினர், கல்வி நிறுவனங்களின் நிர்வாகம், போதைப்பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு பணியாளர்கள், போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு பணியாளர்கள், கடலோரக் காவல் படையினர், தன்னார்வ அமைப்பினர் மற்றும் பலர் மேற்படி தினத்தை சிறப்புற அனுசரித்து, பல்வேறு அமைப்புகளும் போதை மருந்து மற்றும் அவற்றைக் கள்ளத்தனமாக கடத்துதல் ஆகியவற்றுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்ற நம்பிக்கையைப் பொதுமக்கள் மனதில் ஏற்படுத்தினர்.

2015–ஆம் ஆண்டில், மாநிலம் முழுவதுமுள்ள பல்வேறு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் 71 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

போதைப் பொருள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு கிளையுடன் ஒருங்கிணைந்து, போதை மருந்து தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சென்னை, கந்தன்சாவடி முதல் காரப்பாக்கம் வரையில் 3.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மனித சங்கிலி அணிவகுப்பை நடத்தி, அதில் பன்னாட்டு நிறுவனங்களைச் சேர்ந்த 1000 ஊழியர்கள், பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 3000 மாணவர்கள் மற்றும் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் 500 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## (ii) காணொலித் திருட்டுத் தடுப்புப் பிரிவு

காணொலித் திருட்டைக் கட்டுப்படுத்தவும், பதிப்புரிமைச் சட்ட மீறலைக் கண்காணிக்கவும், 17.02.1995 அன்று, காணொலித் திருட்டுத் தடுப்புப்பிரிவு என்ற ஒரு தனிப் பிரிவு எனது அரசால் தொடங்கப்பட்டது. தற்போது, சென்னை (3 பிரிவுகள்), மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், கடலூர், விருதுநகர் மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் 12 பிரிவுகள் உள்ளன.

2015–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2016–ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான காலத்தில் பதிவு செய்யப்பட்ட 4,285 வழக்குகளில், 4,293 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, ரூ. 14.13 கோடி மதிப்பிலான திருட்டு குறுந்தகடுகள்/ காணொலி குறுந்தகடுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

ஏழு நபர்கள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

## (இ) பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவுகள்

### (i) வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு

கூட்டுறவுச் சங்கங்களில் பண முறைகேடு மற்றும் நிதிக் கையாடல் தொடர்பான குற்றங்களை விசாரிப்பதற்காக ஒரு சிறப்புப் பிரிவாக வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு **1971**–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. **2015**–ஆம் ஆண்டில், **116** வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, **96** வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, **82** வழக்குகளில் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதாவது, **78.09** சதவிகித வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் **31.03.2016** வரையிலான காலத்தில்,

21 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 17 வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, 13 வழக்குகளில் குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

### (ii) <u>சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு</u>

சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவு 1983–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இப்பிரிவானது,

(1) தொன்மை வாய்ந்த சிலைகள் திருட்டு,

(2) 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்த சிலைகள் திருட்டு

(3) மாநில அளவிலும் / மாநிலங்களுக்கு இடையிலும் தொடர்புடைய சிலைகள் திருட்டு வழக்குகள்

(4) 1995–ஆம் ஆண்டைய நிலவரப்படி, ரூபாய் ஐந்து லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட விலை மதிப்புள்ள சிலைகள் திருட்டு மற்றும்

(5) கூர் உணர்வுடைய சிலைகள் திருட்டு ஆகியவற்றை புலன் விசாரணை செய்து வருகிறது.

2015–ஆம் ஆண்டில், மூன்று சிலை திருட்டு வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றில் சம்பந்தப்பட்ட 25 கொடுங்குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 13 தொன்மை வாய்ந்த சிலைகள் மீட்கப்பட்டன.

வழக்குகளைக் கண்டுபிடிப்பது மற்றும் புலன் விசாரணை மேற்கொள்வது மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் உள்ள காவல் நிலையங்களில் பதிவாகியுள்ள சிலை திருட்டு வழக்குகளையும் இப்பிரிவு கண்காணிக்கிறது. திருக்கோவில் பாதுகாப்புப் படையினரின் செயல்பாடுகளையும் இப்பிரிவு மேற்பார்வையிடுகிறது.

சிங்கப்பூர் அரசுக்கு நாம் அனுப்பிய வேண்டுகோள் கடிதத்தைத் தொடர்ந்து, தமிழகத்திலுள்ள அரியலூர் மாவட்டத்தில் ஸ்ரீபுரந்தான் கிராமத்திலுள்ள பிரகதீஸ்வரர்

ஆலயத்தில் திருடப்பட்டு, சிங்கப்பூர் ஆசிய பண்பாட்டு அருங்காட்சியகத்தால் வாங்கப்பட்ட ரூ.3.8 கோடி மதிப்புள்ள 1,000 ஆண்டு காலம் பழமை வாய்ந்த உமா பரமேஸ்வரி அம்மன் சிலை சிங்கப்பூரில் இந்திய தொல்லியல் ஆய்வுத்துறை பிரதிநிதியிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தச் சிலையை புது தில்லியில் தொல்லியல் ஆய்வுத் துறையிடமிருந்து பெற்றுக் கொண்ட சிலை திருட்டு தடுப்பு பிரிவினர், நீதிமன்ற ஆணைப்படி தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், திருநாகேஸ்வரர் கோவிலுள்ள சிலை மையத்தில் தமிழக இந்து அறநிலையத்துறை பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள நியூயார்க் மாவட்ட சட்டத்துறை தலைவரிடமிருந்து ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான பூதேவி சிலை மற்றும் 7,50,000 அமெரிக்க டாலர் மதிப்பிலான

சக்கரத்தாழ்வார் சிலை ஆகிய பழமை வாய்ந்த இரண்டு சிலைகளை சிலை திருட்டு தடுப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரின் புலனாய்வுக் குழு பெற்றுக் கொண்டது. இச்சிலைகள் அரியலூர் மாவட்டம், சுத்தமல்லி கிராமத்திலுள்ள வரதராஜ பெருமாள் கோவிலில் இருந்து திருடப்பட்டு விக்கிரமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.133/2008–ல் வழக்கு பதியப்பட்டுள்ளது.

மாநிலத்திலிருந்து திருடப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த சிலைகளைக் கண்டுபிடித்து அவைகளை அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் பிற நாடுகளிலிருந்து நம் நாட்டிற்குத் திரும்பக் கொண்டு வருவதற்குத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### (iii) <u>பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு–2</u>

வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் ஆகியவற்றில் நடைபெறும் மோசடிகள் மற்றும் குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் புலன் விசாரணை செய்யும் முக்கியப் பணியினைப் பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு–2 (நிதி நிறுவனங்கள்) மேற்கொண்டு வருகிறது. மேலும், இப்பிரிவு, 1997–ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிதி நிறுவன முதலீட்டாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளையும் கையாண்டு வருகிறது.

**01.01.2015** முதல் **31.03.2016** வரையில் இப்பிரிவானது, **7,662** முதலீட்டாளர்களுக்கு ரூ.**43.34** கோடி தொகையை திருப்பி அளித்துள்ளது. இரண்டு வழக்குகள் குற்றவாளிகளுக்குத் தண்டனையில் முடிவுற்றன.

**01.01.2015** முதல் **31.03.2016** வரையிலான காலத்தில், **59** நிகழ்வுகளில், ரூ.**64.48** கோடி மதிப்பிலான சொத்துக்களை முடக்குவதற்கான அரசாணைகள் வெளியிடப்பட்டன. இதன் மூலம், தகுதியுள்ள அலுவலர்கள் / மாவட்ட வருவாய் அதிகாரிகள், முடக்கப்பட்ட சொத்துக்களை ஏலம் விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு, அவற்றில் கிடைக்கும் தொகையை முதலீட்டாளர்களுக்குப் பகிர்ந்தளிக்க முடியும்.

பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து முதலீட்டாளர்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு, அவர்களுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய கூட்டங்கள், பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் உற்சாக வரவேற்பைப் பெற்றுள்ளது. அவர்களின்

நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## (ஈ) நுண்ணறிவுப் பிரிவு

மாநில நுண்ணறிவுப் பிரிவானது, பாதுகாப்பு, அமைதி மற்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த தகவல்களைச் சேகரித்தல், ஒன்றிணைத்தல், பகிர்ந்தளித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவில், தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, க்யூ—பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, சிறப்புப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை மற்றும் திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு ஆகியன இயங்கி வருகின்றன.

### (i) <u>தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை</u>

தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையானது நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரிப்பதுடன், பொதுச் சட்டம்—ஒழுங்கைப் பராமரிக்க அனைத்து நிலைகளிலும் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க முன்கூட்டியே தொடர்புடையவர்களுக்கு அத்தகவல்களைப் பகிர்ந்தளிக்கிறது.

### (ii) <u>பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை</u>

தமிழகத்திற்கு வருகை தரும் அயல்நாட்டு அதிபர்கள், இதர பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய நபர்கள் உள்ளிட்ட அதி மிக முக்கிய / மிக முக்கிய நபர்கள் தமிழ்நாட்டிலுள்ள மிக முக்கிய நபர்கள் மற்றும் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய நபர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியினை இப்பிரிவு

மேற்கொண்டு வருகிறது. அதுமட்டுமின்றி, அயல் நாட்டவர் நடவடிக்கை, முக்கிய கேந்திர அமைப்புகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் கடவுச் சீட்டு தொடர்பான நடவடிக்கைகளையும் இப்பிரிவு கையாண்டு வருகிறது. 2015–ஆம் ஆண்டில், 4 அதி மிகமுக்கிய நபர்கள் மற்றும் 1,673 மிக முக்கிய நபர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தபோது, இப்பிரிவினர் இதர பாதுகாப்பு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

குடிபெயர்தல் நுழைவிசைவு பெற்ற அந்நிய நாட்டவர் பதிவு மற்றும் கண்டுபிடித்தல் முறை 01.12.2013 முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கால அவகாச நீட்டிப்பு, வெளியேறுதல், திரும்பிச் செல்லும் நுழைவிசைவு ஆகியவற்றுக்கு அனுமதி கோரும் அந்நிய நாட்டவரின் மனுக்கள் மாநகரங்கள் /

மாவட்டங்களிலுள்ள அயல் நாட்டவர் பதிவு அலுவலகங்கள் இணையதளம் மூலமாக இப்பிரிவு வழியாக அரசுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன. **2015**–ஆம் ஆண்டில் **4,770** மனுக்கள் பெறப்பட்டு, அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் **2014**–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் "பாக். கண்காணிப்பு முறைமை" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**2015**–ஆம் ஆண்டில் **5959** ஆட்சேபமில்லா சான்றிதழ்கள் மற்றும் **76** இந்தியா திரும்ப தடையில்லா சான்றிதழ்கள் தீர்வு செய்யப்பட்டன.

**(iii) <u>முதலமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு</u>**

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் பாதுகாப்பிற்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட இப்பிரிவு, பாதுகாப்புப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவானது,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தங்குமிடம், சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இடங்கள், காவலுடன் செல்லும் வண்டித்தொடர் ஆகியவற்றின்போது, 24 மணி நேரமும் தவறு ஏதும் நிகழாமல் முழுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவில், நெருங்கிய பாதுகாப்புக் குழுக்கள், வெடிகுண்டைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பிரிவு, மோட்டார் வாகனப் பிரிவு மற்றும் தொழில் நுட்பப்பிரிவு ஆகியன அடங்கியுள்ளன.

### (iv) <u>திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு</u>

அமைப்பு ரீதியான குற்றவாளிக் குழுக்கள், போக்கிரிகள், போதை மருந்து கடத்துதல், ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருட்களைக் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லுதல், ஆட்கடத்தல், ஹவாலா பணப் பரிவர்த்தனைகள், கள்ளநோட்டு புழக்கங்கள் போன்ற

நடவடிக்கைகள் குறித்து, பயனுள்ள நடவடிக்கை எடுக்கத்தக்க நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து, களப் பணியாளர்களுக்கு அத்தகவல்களைப் பகிர்ந்தளிக்கும் பணிகளை மேற்கொள்ள "திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு" என அழைக்கப்படும் இப்பிரிவு உருவாக்கப்பட்டது.

2015–ஆம் ஆண்டில், இப்பிரிவினர் அளித்த நுண்ணறிவுத் தகவல்களின் அடிப்படையில், பல குற்ற நடவடிக்கைகள் / கொலை வழக்குகள், பணத்திற்காக ஆட்கடத்தல், வழிப்பறிகள் போன்றவற்றில் ஈடுபட்ட 41 கொடும் போக்கிரிகள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இப்பிரிவு பணியாளர்கள், 84 சட்டவிரோதமான துப்பாக்கிகளை (SBML)

பறிமுதல் செய்ததுடன், தடை செய்யப்பட்ட பரிசுச் சீட்டு சம்பந்தமாக 4 வழக்குகளையும், போலிச் சான்றிதழ் சம்பந்தமாக 2 வழக்குகளையும் கண்டுபிடித்தனர்.

இப்பிரிவினர், திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் ரூ.3.39 லட்சம் மதிப்புள்ள கள்ள இந்திய ரூபாய் நோட்டுக்களைப் புழக்கத்தில் விட முயன்ற ஏழு நபர்களைக் கைது செய்துள்ளனர். மேலும், ஆபாச படங்கள்/திரைப்படங்களை கைப்பேசி, மெமரி அட்டை, பென் டிரைவ் மற்றும் குறுந்தகடுகளில் பள்ளி/கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்குப் பதிவேற்றம் செய்து கொடுத்த 18 நபர்களைப் பதிப்புரிமைச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர்.

## (V) **‘க்யூ’ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை**

**1967–1970–**ஆம் ஆண்டுகளில், தமிழ்நாட்டில் நக்சலைட் நடவடிக்கைகள் தலைதூக்கியபோது, தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையில், தனியாக ஒரு பிரிவு உருவாக்கப்பட்டது. தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை–2 என்று இருந்த இப்பிரிவானது, 1976–ஆம் ஆண்டு, ஜூலை மாதம், ‘க்யூ’ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ், புலன் விசாரணை செய்யும் அதிகாரங்கள் ‘க்யூ’பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. ‘க்யூ’ பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை பிரிவுகள் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

‘க்யூ’ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் பிரிவுகள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. மேலும் இப்பிரிவு, நக்சலைட்டுகள், பிற தீவிரவாதிகள் மற்றும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரிப்பதுடன், அவர்கள் தங்களது களத்தை அமைப்பதிலிருந்து அவர்களைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மேலும் ‘க்யூ’ பிரிவானது, வழக்குகளின் புலன் விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம், களத்தில் பெறப்படும் நுண்ணறிவுத் தகவல்களையும், விசாரணையையும் ஒருங்கிணைத்து சிறப்பான நடவடிக்கைகளுக்கு வழிவகை செய்கிறது. ‘க்யூ’பிரிவு, இலங்கைத் தமிழர்கள் தொடர்பான விவகாரங்களையும் கையாண்டு வருகிறது.

### (vi) <u>சிறப்புப் பிரிவு</u>

சிறப்புப் பிரிவானது, மத அடிப்படைவாத அமைப்புகளைக் கண்காணித்து வருகிறது. இப்பிரிவு, நடவடிக்கை எடுக்கத்தக்க தகவல்களைத் திரட்டி, அவற்றை உள்ளூர் காவல் துறையினருக்கு மேல் நடவடிக்கைக்காகப் பகிர்ந்தளித்து வருகிறது.

### (உ) <u>மாநில குற்ற ஆவணக் காப்பகம்</u>

காவல் படையின் செயல் திறனை மேம்படுத்தவும், குற்ற ஆவண முறைமையை மேம்படுத்தவும், தமிழ்நாட்டில் மாநில குற்ற ஆவணக் காப்பகம் உருவாக்கப்பட்டது. மாநில குற்ற ஆவணக் காப்பகத்தின் கீழ், காவல் கணினிப் பிரிவு, விரல் ரேகைப் பதிவுக் கூடம், குற்றச் செயல்முறை கண்டறியும் பிரிவு மற்றும் புள்ளியியல் பிரிவு ஆகியன செயல்படுகின்றன.

## (i) குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழி முறை

குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழி முறை (Crime and Criminals Tracking Network System - CCTNS) என்ற அகில இந்திய திட்டத்தை, மாநில குற்ற ஆவணக் காப்பகம் அமலாக்கம் செய்து வருகிறது. 11–வது ஐந்தாண்டு திட்டத்தின் ஒரு பகுதியாகத் தேசிய மின்–ஆளுமைத் திட்டத்தின் கீழ், இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் குறித்த தரவுகளை விரிவாகவும், ஒருங்கிணைப்பு முறையிலும் திரட்டுவது, மின்–ஆளுமைக் கோட்பாடுகளைப் பின்பற்றி காவல்துறையின் திறமை மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துவது, நாடு தழுவிய வலைப்பின்னல் கட்டமைப்பு உருவாக்குவது ஆகியன இம்முறைமையின் நோக்கங்களாகும். இத்திட்டமானது

தமிழ்நாட்டில், 1,961 இடங்களில், 1,482 காவல் நிலையங்கள் மற்றும் 479 உயர் அலுவலகங்களை உள்ளடக்கியதாகும்.

திருவள்ளூர், அரியலூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்கள் மற்றும் கோயம்புத்தூர் காவல் ஆணையரகம் ஆகியவற்றில் இத்திட்டம் 13.03.2013 அன்று, என்னால் துவக்கி வைக்கப்பட்டதுடன், குடிமக்கள் நுழைவு தளமும் (Citizens Portal) தொடங்கி வைக்கப்பட்டது. மேலும், 26.09.2013 அன்று, மீதமுள்ள 35 மாவட்டங்கள் / காவல் ஆணையரகங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு முழுமை பெற்றது.

தொடக்கத்தில் மூன்றாண்டுகளில் மூன்று கட்டங்களாக நிறைவேற்றுவது என இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. பின்னர், அமலாக்க காலம் குறைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளில் இரண்டு

கட்டங்களாக முடிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தை அமல்படுத்தவும், ஒருங்கிணைக்கவும் NTL டெக்னாலஜிஸ் லிமிடெட் என்ற நிறுவனத்துடன் மாநில குற்ற ஆவணக் காப்பகம் **30.09.2011** அன்று, ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, குறிப்பிட்ட காலவரையறைக்குள், அதாவது **26.09.2013** அன்று, இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப் பட்டது.

இரண்டாம் கட்ட அமலாக்கத்திற்காக **425** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் சிறப்பு பிரிவுகள் / காவல் நிலையங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அது **2015**–ஆம் ஆண்டில் அமலாக்கம் செய்யப்பட்டது.

இத்திட்ட அமலாக்கத்தின் ஒரு பகுதியாக, கணினி வழி முதல் தகவல் அறிக்கை பதிவு

முறையானது அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் தனிப்பிரிவுகளில் (1,910 இடங்கள்) 15.04.2016 முதல் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் பயனாக, கையால் எழுதப்படும் முதல் தகவல் அறிக்கைகள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டு தற்போது சி.சி.டி.என்.எஸ். மூலம் உருவாக்கப்படும் முதல் தகவல் அறிக்கைகள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுகின்றன. மாநிலம் முழுவதும், சராசரியாக, 2,150 கணினி வழி முதல் தகவல் அறிக்கைகள் ஒவ்வொரு நாளும் பதிவு செய்யப் படுகின்றன.

குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழி முறையானது, மின்–ஆளுமை வழியாக காவல் சேவை முறைகளை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. வெளிப்படையான,

எளிதில் தொடர்பு கொள்ளக்கூடிய பல்வகைச் சாதனங்கள் வழியாக நட்புணர்வுடன் காவல் துறையினரின் சேவைகளைப் பொதுமக்கள் பெற வேண்டும். இதன் நோக்கமானது தற்போதுள்ள சேவை முறையை மேம்படுத்துவது மட்டுமின்றி, இணையதளம் / கைபேசி போன்ற மாற்று வசதிகள் மூலம் காவல் துறையைப் பொது மக்கள் தொடர்பு கொள்ள வழிவகை செய்வதேயாகும். மேலும், பொது மக்கள் தங்கள் புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி காவல் நிலையங்களுக்கு அடிக்கடி செல்வதைக் குறைக்கக் கூடியதாகவும், தங்களது புகார்களின் நிலை குறித்து எளிதாக அறிந்து கொள்ள உதவும் வகையில் இவ்வழிமுறைகள் அமைய வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்.

மாநில அரசு, குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும்

வலைப்பின்னல் வழி முறையின் கீழ் சிறப்புப் பிரிவுகளையும் சேர்ப்பதற்காக **ரூ.9.9** கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. காவல் ஆவணங்களைப் பொதுவான முறையில் இன்றைய நிலைக்கேற்ப ஒருங்கிணைக்கும் மென்பொருள் (CIPRUS), மின்–கற்றல் முறைமை அல்லது கணினி சார் பயிற்சி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது. இது முடிக்கப்பட்டு, **29.01.2015** அன்று தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டது.

**2015**–ஆம் ஆண்டில் காவல் ஆவணங்களைப் பொதுவான முறையில் இன்றைய நிலைக்கேற்ப ஒருங்கிணைக்கும் மென்பொருளைப் (CIPRUS) பயன்படுத்தி, கடவுச் சீட்டு மற்றும் முன்நடத்தை சரிபார்த்தல் பணி மேற்கொள்ளப்பட்ட **937** மனுக்கள்,

மனுதாரர்களின் குற்றக் குறிப்புப் பதிவுகள் அடிப்படையில், நிராகரிக்கப்பட்டன.

2015–ஆம் ஆண்டில் காவல் ஆவணங்களைப் பொதுவான முறையில் இன்றைய நிலைக்கேற்ப ஒருங்கிணைக்கும் மென்பொருள் (CIPRUS) பயன்படுத்துவது தொடர்பாக, அதிகாரிகள் உட்பட மொத்தம் 20,778 பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழிமுறையின் கட்டமைப்புக்கான சொத்து மேலாண்மை மென்பொருளை மேம்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**(ii) காவல் கணினி பிரிவு**

புலன் விசாரணை செய்வதற்கு ஏதுவாக குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் தொடர்பான தரவுகளை கணினி மயமாக்குவதற்கும், குற்றங்கள் தொடர்பான புள்ளி விவரங்களைத் தொகுப்பதற்கும் காவல் கணினி பிரிவு 1971–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

காவல் கணினி பிரிவு, குடிமக்கள் நுழைவுத்தளத்தை (citizen portal) கையாள்வதுடன், புலனாய்வு மற்றும் புள்ளிவிவர சேகரிப்பிற்காக பயன்படுத்தப்படும் இதர பயன்பாட்டு மென்பொருள்களையும் மேற்பார்வை செய்துவருகிறது.

பொது மக்கள் இணையதளம் மூலமாக புகார்கள் மற்றும் தகவல்களை அனுப்பவும், அவர்கள் அளிக்கும் புகார்கள் அல்லது அது

தொடர்பான வழக்குகளின் நிலையைப் பற்றி அறியவும், **13.03.2013** அன்று, 'தமிழ்நாடு காவல் குடிமக்கள் சேவைகள்' (http://eservices.tnpolice.gov.in) என்ற நுழைவு தளம் ஒன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டது. இணையதளம் மூலம் உரிமம் கோரி (ஆயுதங்கள், இணையதள மையம், காணொலி நூலகம்) விண்ணப்பிக்கவும், படிவங்களை பதிவிறக்கம் செய்யவும், காணாமல் போன நபர்கள், அடையாளம் தெரியாத பிரேதங்கள் மற்றும் குற்றத் தடுப்பு யுக்திகள் ஆகிய தகவல்களைக் காணவும் இந்த வலைதளம் உதவுகிறது. இணையதளம் வாயிலாகப் பெறப்படும் புகார்களைக் கண்காணிக்க, மாநில குற்ற ஆவணக் காப்பகத்தில் வலைதளப் பிரிவு ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. மேலும், அந்தந்த மாவட்டங்கள் / நகரங்களில் இணையதளம் மூலமாக பதிவு செய்யப்படும் புகார்களை ஒருங்கிணைத்துக்

கண்காணிக்க மாவட்ட / நகர அளவிலான வலைதளப் பிரிவுகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

குடிமக்கள் நுழைவுதள பயன்பாட்டின் மூலமாக **31.03.2016** வரையில் காணாமல் போன **17** நபர்கள்அடையாளம் காணப்பட்டதுடன், காணாமல் போன **325** நபர்களின் அடையாளங்கள் அடையாளம் தெரியாத பிரேதங்களுடன் ஒத்துப்போயிருந்ததும் கண்டறியப்பட்டது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தால் வழங்கப்பட்ட தலாஷ் (TALASH) என்ற பயன்பாட்டு மென்பொருளானது, தேடப்படும் நபர்களுடன் கைது செய்யப்பட்ட நபர்களை ஒப்பிடவும், காணாமல் போனவர் அல்லது காவலிலிருந்து தப்பிச் சென்றவர் அல்லது விட்டோடி ஆகியோரை, அடையாளம்

காணப்படாத பிரேதங்கள் மற்றும் கைது செய்யப்பட்ட நபர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் பயன்படுத்தப்படுகிறது. மாநில குற்ற ஆவணக் காப்பகமும் இந்த பயன்பாட்டு மென்பொருளைப் பயன்படுத்துகிறது. 1995 முதல் 2015 வரையான காலகட்டத்தில், காணாமல் போன நபர்கள் மற்றும் அடையாளம் தெரியாத பிரேதங்களின் மொத்த எண்ணிக்கையான 19,545 பதிவுகள் தலாஷ் தரவுதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அவற்றின் அடிப்படையில் 485 அறிவுறுத்தல் நமூனாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### (iii) <u>உருவப்படம் அமைப்பு முறைமை</u>

இந்த முறைமையின் கீழ் 2001 முதல் 2015வரை 1013 உருவப் படங்கள் வரையப்பட்டன. 2015–ஆம் ஆண்டு, 41 உருவப்படங்கள் வரையப்பட்டு, அதன்மூலம் 5 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. உருவப்படங்களை

வரைவது மட்டுமல்லாமல், **39** மாவட்டங்கள் மற்றும் சிறப்புப் பிரிவுகளைச் சேர்ந்த **789** காவல் பணியாளர்களுக்கு உருவப்படம் அமைப்பு முறைமை குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### (iv) "வாகன் சமன்வே" முறையின் கீழ் வாகனங்களின் விவரமறிதல்

**2014**–ஆம் ஆண்டில், தேசிய குற்ற ஆவணக் காப்பகம், ஏற்கெனவே இருந்து வந்த மோட்டார் வாகன ஒருங்கிணைப்பு முறையை மாற்றியமைத்து, "வாகன் சமன்வே" என்ற புதிய மென்பொருளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதிய முறையின் கீழ், பொதுமக்கள் இணையதளத்தில் சென்று, குறிப்பிட்ட ஒரு வாகனமானது குற்றத்தில் சம்பந்தப்பட்டுள்ளதா அல்லது காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதா என்பன போன்ற

விவரங்களை ஆய்வு செய்து சரிபார்த்துக் கொள்ளஇயலும்.

### (V) <u>சிறையிலிருந்து விடுதலையானோர் மீதான கண்காணிப்பு</u>

சொத்து தொடர்பான குற்றங்கள் புரிந்து சிறையிலிருந்து விடுதலையானோர் பற்றிய விவரங்கள் அவ்வப்போது சேகரித்து தொகுக்கப்படுகின்றன. 2015–ஆம் ஆண்டில், சிறையிலிருந்து விடுதலையான (பிணை / விடுதலை) 15,067 சொத்து தொடர்பான குற்றவாளிகள் பற்றிய விவரங்கள் தொகுக்கப்பட்டு, அதனடிப்படையில் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கான விழிப்புணர்வுத் தகவல்கள், சம்பந்தப்பட்ட ஆணையரகங்களுக்கு/ மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பப்பட்டுள்ளன.

## (vi) விரல் ரேகை பதிவுக் கூடம்

தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடம், 1895–ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டது. இக்கூடம், உலகிலேயே மிகப் பழமையான கூடங்களில் ஒன்றாகும்.

விரல் ரேகைப் பதிவுகள் அடங்கிய சேமிப்புக் கிடங்காக இக்கூடம் திகழ்கிறது. இதில், 1,87,733 தண்டனை பெற்ற நபர்களின் விரல் ரேகைப் பதிவுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கூடமானது, நீதிமன்றங்கள் மற்றும் பிற துறையினரால் வல்லுநர் கருத்துக்காக அனுப்பப்படுகின்ற ஐயத்திற்குரிய ஆவணங்களின் மீது காணப்படும் விரல் ரேகைப் பதிவுகளைக் கூர்ந்தாய்வு செய்யும் பணிகளையும் மேற்கொண்டுவருகிறது.

இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் முதன் முறையாக அனைத்து மாவட்ட தலைமையிடங்கள்/ஆணையரகங்களில், ஒரிலக்க விரல் ரேகைப் பதிவு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில், மொத்தம் **36** ஒரிலக்க விரல் ரேகைப் பதிவுக் கூடங்கள் இயங்கி வருகின்றன. **2015–**ஆம் ஆண்டு ஜனவரி முதல் **2016–**ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில், **938** வழக்குகளில் விரல் ரேகைப் பதிவுகள் மூலம் குற்றவாளிகள் கண்டறியப் பட்டுள்ளனர்.

பிரதானக் கூடத்திலுள்ள அனைத்து விரல்ரேகைப் பதிவு விவரங்கள் மற்றும் அவற்றின் ஆவணங்கள் தற்காலத்திற்கேற்றபடி மேம்படுத்தப்பட்டு, விரல் ரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறைமையின்படி (FACTS) சேமித்து வைக்கப்படுகின்றன. தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடமானது, அடையாறு,

அண்ணாநகர், பூக்கடை, மயிலாப்பூர் மற்றும் திருவல்லிக்கேணி மாவட்ட காவல் துணை ஆணையர் அலுவலகங்கள் மற்றும் ஒரிலக்க விரல்ரேகை பதிவுக் கூடத்தின் சென்னை நகரம் **1–**வதுபிரிவு (சிந்தாதிரிப்பேட்டை) மற்றும் சென்னை நகரம் **2–**வது பிரிவு (புனித தோமையர் மலை) ஆகியவற்றில், சந்தேகத்திற்குரிய விரல்ரேகைப் பதிவுகளை வி.பி.என்–எம்.பி.எல்.எஸ். (VPN-MPLS) தீர்வு மூலம் இணையவழியில் சரிபார்ப்பதற்காக தொலைதூர வினவல் பணி நிலைய கணினிகளை வழங்கியுள்ளது. **2015–**ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் **2016–**ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில், விரல் ரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறைமை (FACTS) **5–**ஆம் பதிப்பின் மூலமாக **209** தடயப் பதிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, மேலும், இந்த முறைமையைப் பயன்படுத்தி **32** வழக்குகளும்

கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 3,758 தண்டனை பெற்ற நபர்களின் விரல் ரேகை பதிவுகள், விரல் ரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறைமை (FACTS) தொகுப்பிற்கு பெறப்பட்டுள்ளன.

தொலைதூரத்திலுள்ள மத்திய தரவுத்தளத்தை அணுகுவதற்கென, 8 தொலைதூர வினவல் பணி நிலைய கணினிகள் செயல்பட்டு வருகின்றன.

பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்ட நபர்களின் விரல் ரேகைப் பதிவுகள், ஆவணத்திலுள்ள விரல் ரேகைப் பதிவுச் சீட்டுகளுடன் ஒப்பீடு செய்யப்படுகின்றன. 2015–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2016–ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில், மொத்தம் 17,014 விரல் ரேகைப் பதிவுச் சீட்டுகள்

பெறப்பட்டன. அவற்றில், 1,520 வழக்குகள் கண்டறியப்பட்டன.

விரல் ரேகைக் பதிவுக் கூடத்தை வலுப்படுத்த, மாவட்டங்கள் மற்றும் நகரங்களில் உள்ள விரல் ரேகைப் பதிவுக் கூட அலகுகளுக்கு, 110 உயர்தர விரல் ரேகைப் பதிவுகள் சேகரிப்புச் சாதனங்கள் அடங்கிய பெட்டிகள் வழங்க அரசாணை (நிலை) எண்.184, உள் (காவல்–5) துறை, நாள் 25.02.2014–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தற்போது, இத்தகைய பெட்டிகள் அனைத்து மாவட்டங்களுக்கும் வாங்கி அனுப்பப்பட்டு, அவற்றைக் கையாளும் பயிற்சியானது அந்த நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், விரல் ரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறைமை (FACTS)–ன் தற்போதுள்ள 5–ஆம்

பதிப்பினை, அனைத்து மாவட்டங்களுக்கும் நீட்டிக்கும் விருப்புரிமையுடன், மத்திய தரவுத் தளத்தில் உள்ள 7–ஆம் பதிப்பாக தரம் உயர்த்திட, எனது அரசு, அரசாணை (டி) எண்.160, உள் (நவீனமயமாக்கல்) துறை, நாள் 19.02.2016–ன்படி ரூ.2.47 கோடி ஒப்பளிப்பு செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

**(vii) <u>குற்றச் செயல்முறையைக் கண்டறியும் பிரிவு</u>**

இப்பிரிவானது, குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, அவற்றைப் புலன் விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு பகிர்ந்தளிக்கிறது. காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களையும் இப்பிரிவு சேகரிக்கிறது. மேலும், இப்பிரிவு, குற்ற நுண்ணறிவு அரசிதழைத் தயாரித்து, அதனை அனைத்து காவல் நிலையங்களுக்கும் சுற்றறிக்கையாக அனுப்புகிறது.

**(ஊ) <u>தமிழ்நாடு சிறப்பு காவல் படை அணிகள்</u>**

ஆவடியில் உள்ள படைக்கல மையம் (ஆயுதப்படை காவல் பயிற்சி மையம்) உட்பட, 16 தமிழ்நாடு சிறப்பு காவல் படை அணிகள் உள்ளன. தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் 8–ம் அணியானது புது தில்லியில் உள்ள திகார் சிறைச்சாலையில் சிறப்புப் பணியில் உள்ளது. தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள், தேர்தல் பணிகள் உட்பட பெரிய அளவிலான சட்டம் மற்றும் ஒழுங்கு பாதுகாப்பு பணிகளில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும், பிற மாநிலங்களிலும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

காவல் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக, ஆவடி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இரண்டு இடங்களில், தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் கட்டுப்பாட்டில் மோட்டார் வாகனப் பராமரிப்புப்

பணிமனைகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விரண்டு பணிமனைகளிலும், சுமார் **2,896** பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆவடியில் தமிழ்நாடு சிறப்புக் காவல்படைப் பிரிவிற்கு நிர்வாக கட்டடம் கட்டுவதற்காக ரூ.**1.86** கோடி ஒப்பளிப்பு செய்து, அரசாணை (நிலை) எண்.**410**, உள் (காவல்–**10**) துறை, நாள் **14.05.2015**–ன்படி எனது அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

கோயம்புத்தூர் மாநகரம், கோவைப்புதூரில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை பிரிவில் ஆண் ஆளிநர்களுக்கான படை குடியிருப்பு கட்டுவதற்காக ரூ.**91.98** லட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை (நிலை) எண்.**914**, உள் (காவல்–**10**) துறை, நாள் **15.12.2015** வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், இராஜபாளையத்தில் தமிழ்நாடு சிறப்பு காவல்படை பிரிவிற்காக ஆயுதக் கிடங்கு கட்டுவதற்காக ரூ.1.93 கோடி ஒப்பளிப்பு செய்து அரசாணை (நிலை) எண்.916, உள் (காவல்–10) துறை, நாள் 15.12.2015 வெளியிடப்பட்டுள்ளது.

**(எ) <u>செயலாக்கப் பிரிவு</u>**

பல்வேறு தேவைகளுக்காக சிறப்பு பயிற்சி பெற்ற ஆளிநர்களை (அதிரடிப்படை வீரர்கள்) தயார் நிலையில் வைத்திருப்பது மற்றும் பயிற்சி அளிப்பது போன்ற தேவைகளை இப்பிரிவு கவனித்து வருகிறது. தமிழ்நாடு அதிரடிப்படையும், வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் படை மற்றும் மோப்ப நாய் பிரிவு உள்ளடக்கிய தமிழ்நாடு அதிரடிப்படைப் பள்ளியும் இப்பிரிவில் அடங்கும்.

## (i) <u>தமிழ்நாடு அதிரடிப் படை</u>

**1991**–ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த சிறப்பு பாதுகாப்பு குழு மாற்றியமைக்கப்பட்டு, தமிழ்நாடு அதிரடிப்படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப்படைப் பள்ளி ஆகிய பிரிவுகள் உருவாக்கப்பட்டன. இவை, காவல்துறை கூடுதல் இயக்குநர் (செயலாக்கம்) தலைமையில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அதிரடிப்படையானது, பயங்கரவாத சம்பவங்களைத் தனது அதிரடி நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தும் ஓர் உயர் பிரிவாகும். துரித நடவடிக்கை குழுவையும் (Quick Reaction Team) தமிழ்நாடு அதிரடிப்படை வழங்கி வருகிறது. மேலும், இப்பிரிவு அவசரகால நிலைமைகளை எதிர்கொள்வதற்கான பல்வேறு ஒத்திகைப்

பயிற்சிகளில், தேசிய பாதுகாப்புப் படையினருடன் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுவருகிறது.

தமிழ்நாடு அதிரடிப் படையில் மாநில பேரிடர் நிலை எதிர்கொள்ளும் படைக்குழு ஒன்றை உருவாக்கிட சென்னை ஆயுதப்படைப் பிரிவிலிருந்து ஒரு காவல்துறை துணை கண்காணிப்பாளர், 3 காவல் ஆய்வாளர்கள், 6 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 70 பிற நிலையிலுள்ள காவல் ஆளிநர்களை உள்ளடக்கிய 80 பேர் கொண்ட குழுவைக் காவல்துறை தலைமை இயக்குநர், அயற்பணியில் செயலாற்ற உத்தரவு பிறப்பித்துள்ளார். தேசிய பேரிடர் எதிர்கொள்ளும் படையினர் ஆலோசனையுடன் பேரிடர் மேலாண்மை மற்றும் மீட்புப் பணிகள் குறித்து 50 தமிழ்நாடு சிறப்பு காவல்படை ஆளிநர்களுக்கு 28.08.2015 முதல் 06.10.2015

வரை ஆறு வார கால பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**2015**–ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் கனமழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளத்தின்போது, வெள்ளம் பாதித்த பகுதிகளில் தமிழ்நாடு அதிரடிப்படை/தேசிய பேரிடர் எதிர்கொள்ளும் படை ஆளிநர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர்.

**<u>2015–ஆம் ஆண்டில் புதிய முயற்சிகள்</u>**

தமிழ்நாடு அதிரடிப்படையில் மாநில பேரிடர் எதிர்கொள்ளும் படை உருவாக்கப்பட்டதை அடுத்து, சமீபத்திய இயற்கை சீற்றம் மற்றும் பேரிடர் ஆகியவற்றில் அதனுடைய பயன்பாட்டை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சிறப்பு காவல் படைப் பிரிவுகளில் உள்ள ஏற்கனவே துரித நடவடிக்கை அம்சங்களில்

பயிற்சி பெற்ற **10** துரித நடவடிக்கை குழுக்களுக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்மூலம், அவர்களை சம்பந்தப்பட்ட படைத் தலைவர்கள்/ மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் சரக/மாவட்ட பேரிடர் எதிர்கொள்ளும் படையாக பயன்படுத்திக் கொள்ள முடியும். அதைத் தொடர்ந்து, **18.01.2016** முதல் ஒத்திவாக்கம் மற்றும் பள்ளிப்பட்டு பயிற்சி மையங்களில் பயிற்சி துவங்கப்பட்டு, முறையே **31.01.2016** மற்றும் **26.03.2016** ஆகிய தேதிகளில் அப்பயிற்சிகள் முடிவுற்றன.

### (ii) <u>தமிழ்நாடு அதிரடிப்படைப் பள்ளி</u>

தமிழக காவல் துறையில் பணிபுரியும் ஆண்/பெண் காவலரை அதிரடிப்படை வீரராகத் தயார்படுத்துவதற்கு தேவையான பயிற்சிகளைத்

தமிழ்நாடு அதிரடிப்படைப் பள்ளி அளித்து வருகிறது. ஆயுதங்களைக் கையாளுதல், தந்திர நடவடிக்கைகளுக்கான பயிற்சி, நவீனரக ஆயுதங்களைக் கையாளுதல், வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச்செய்யும் நுணுக்கம், காவல்துறையைச் சேர்ந்த மோப்ப நாய்கள் மற்றும் அவைகளைக் கையாள்பவர்களுக்குப் பயிற்சி, மறைந்திருந்து துப்பாக்கி சுடும் பயிற்சி மற்றும் இதர பாடப் பயிற்சிகளும் இப்பள்ளியில் அளிக்கப்பட்டு வருகின்றன. 2015–ஆம் ஆண்டு, தமிழ்நாடு அதிரடிப்படை பள்ளியின் சார்பில், 1,775 காவல்பணியாளர்களுக்கும், 80 பிற துறை (தமிழ்நாடு) பணியாளர்களுக்கும் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டதோடு, 344 பிற மாநில காவல் பணியாளர்கள் / மத்திய அமைப்புகள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கும் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

### (iii) <u>வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் படை</u>

வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் படையானது **1991–**ல் உருவாக்கப்பட்டது. **2015–**ஆம் ஆண்டில், இப்படையினர் **722** நிகழ்வுகளில் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### (iv) <u>தமிழ்நாடு அதிரடிப் படை பள்ளியின் மோப்ப நாய்ப் பிரிவு</u>

தமிழ்நாடு அதிரடிப் படை பள்ளியில் மோப்பநாய்ப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. **2015–**ஆம் ஆண்டில், சதிச் செயல்கள் தடுப்பு மற்றும் குண்டு வெடிப்பு குறித்த தொலைபேசி மிரட்டல்கள் போன்ற **1,110** நிகழ்வுகளில், மோப்பநாய்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

## (ஏ) <u>சிறப்பு இலக்குப் படை</u>

சிறப்பு இலக்குப் படையானது 1993–ஆம் ஆண்டு எனது அரசால் கீழ்க்கண்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்டது: அ) சந்தனக் கடத்தல் வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகளைக் கைது செய்வது, ஆ) ஆயுதம் ஏந்திய போராட்டம், உள்நாட்டுக் கலகம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கையாளுதல், இ) விமானக் கடத்தல், கடத்தல் மற்றும் பிணைத்தொகைக்காக ஆட்கடத்தல் வழக்குகளைக் கையாளுதல் மற்றும் ஈ) இயற்கைப் பேரழிவுகளின்போது உதவி புரிதல். 2004–ஆம் ஆண்டு வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகள் வெற்றிகரமாக ஒழிக்கப்பட்ட பிறகு, இப்படைக்கு கீழ்க்கண்ட பொறுப்புகள் வழங்கப்பட்டன.

(1) வனப்பகுதி சரணாலயங்களில் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல்,

(2) மலைவாழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும்

(3) காடுகளைத் தீவிரவாதிகள் தங்கள் புகலிடமாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் தடுத்தல்.

2015–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2016–ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில், 689 தேடுதல் பணிகளும், 103 மறைந்திருந்து தாக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. சிறப்பு இலக்குப்படையானது, 2016–ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை, 31–க்கும் மேற்பட்ட வழக்குகளைக் கண்டுபிடித்துள்ளதுடன், வனம் மற்றும் வனவிலங்குகளுக்கு எதிரான குற்றங்களில் தொடர்புடைய 68–க்கும் மேற்பட்ட நபர்களைக் கைது செய்துள்ளது. இப்படையானது, 37 இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், அருணாசலப்

பிரதேசத்தைச் சேர்ந்த 52 காவல் ஆளிநர்கள் மற்றும் தமிழ்நாடு அதிரடிப் படையினர் மற்றும் வனத்துறை பணியாளர்கள் உள்ளிட்ட சுமார் 1,112 பணியாளர்களுக்குப் பயிற்சிஅளித்துள்ளது

சமீப காலமாக, தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களும் இணைகின்ற எல்லைப் பகுதியான மும்முனை சந்திப்பில், சிறப்பு இலக்குப் படை தனது கவனத்தை செலுத்தத் துவங்கியுள்ளது. இப்பகுதியில், சிறப்பு இலக்குப் படை தனித்தும் மற்றும் அண்டை மாநிலங்களுடன் கூட்டுப் பயிற்சியில் இணைந்தும், தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகிறது.

கேரள மாநிலத்தின் வனப்பகுதியில், குறிப்பாக நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் எல்லையோரம் அமைந்துள்ள

மலப்புரம், வயநாடு மற்றும் பாலக்காடு போன்ற மாவட்டங்களில் மாவோயிஸ்டுகளின் செயல்பாடுகள் மற்றும் நடமாட்டங்கள் தொடர்ந்து இருந்து வருவதால், தமிழ்நாடு சிறப்பு இலக்குப்படை கேரள காவல் துறையினரோடு கூட்டு தேடுதல் வேட்டைகளை நடத்தினர்.

2015–ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2016–ஆம் ஆண்டு மார்ச் வரை சிறப்பு இலக்குப் படை 171 நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து, சம்பந்தப்பட்ட முகமைகளுடன் பகிர்ந்துள்ளது. முக்கிய சிறப்பு பணிகளின்போது, சிறப்பு இலக்குப் படையின் நடவடிக்கை பிரிவானது சிறப்பு இலக்குப் படை நுண்ணறிவுப் பிரிவிடமிருந்து பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் திட்டமிட்டு, தேடுதல் வேட்டைகளை நடத்தும்.

இந்திய மருத்துவ சங்கத்தின் மருத்துவர்கள் மற்றும் நல அமைப்புகளின்

ஒத்துழைப்புடன், **29** மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, அவற்றால் **5,730** நபர்கள் பயனடைந்துள்ளனர்.

## (ஐ) <u>கடலோரப் பாதுகாப்புக் குழுமம்</u>

தமிழ்நாடு, **13** கடலோர மாவட்டங்கள் மற்றும் **591** மீனவ கிராமங்களை உள்ளடக்கிய **1,076** கிலோ மீட்டர் நீளம் கொண்ட கடலோர எல்லைப் பகுதியைக் கொண்டுள்ளது.

(1) எரிபொருள், மருந்துப் பொருட்கள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களைத் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குக் கடல்வழியாக கடத்துவதைத் தடுக்கவும்,

(2) தமிழ்நாட்டிற்குள் போராளிகள் ஊடுருவுவதைத் தடுக்கவும்,

(3) மீனவர்கள் மற்றும் போராளிகளுக் கிடையேயான கூட்டுச் சதி உருவாவது போன்றவற்றைத் தடுக்கவும்,

கடலோரப் பாதுகாப்புக் குழுமம் 1994–ஆம் ஆண்டு எனது அரசால் உருவாக்கப்பட்டது.

சமீப காலம் வரை, கடலோரப் பாதுகாப்புக் குழுமமானது கடலோரப் பகுதிகளில் சுற்றுக் காவல் மேற்கொள்ளுதல், சோதனைச் சாவடிகளில் வாகனங்களைச் சோதனையிடுதல் போன்ற பணிகளை தரைபரப்பில் மட்டுமே செய்து வந்தது. ஆறு மண்டல அலுவலகங்களும், 11 அலகுகளும், 60 சோதனைச் சாவடிகளும் அமைக்க 1994–ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மத்திய அரசின் கடலோரப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 12 கடல்சார் காவல் நிலையங்கள்,

12 கடல்சார் புறக்காவல் மற்றும் 40 கூடுதல் சோதனைச் சாவடிகள் அமைக்க மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளது. மேலும், கைத்துப்பாக்கிகள், இலகுரக இயந்திர துப்பாக்கி (LMG), இந்திய சிறு ஆயுத முறை (INSAS) துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகள் போன்றவற்றுடன் கூடிய 12 டன் திறன் கொண்ட 12 படகுகளும், 5 டன் திறன் கொண்ட 12 படகுகளையும் இந்திய அரசு வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ், 30 கடல்சார் காவல் நிலையங்கள், 12 டன் திறன் கொண்ட 20 படகுகள், 12 இறங்கு தளங்கள் அமைக்கவும், 30 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 60 இருசக்கர வாகனங்கள் வாங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், கடலோரப் பாதுகாப்புக் குழுமத்திற்கு

கடுந்தன்மை கொண்ட 8 காற்று அடைக்கக் கூடிய படகுகளும், 6 ஜெமினி படகுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கடலோர பாதுகாப்பு திட்ட இரண்டாம் கட்டத்தின் கீழ் 11 உதவி ஆய்வாளர்கள், 33 தலைமைக் காவலர்கள், 110 காவலர்கள் மற்றும் 5 அமைச்சுப் பணியாளர்களுடன் கூடிய 11 கடல்சார் காவல் நிலையங்களை அமைக்க அரசாணை (நிலை) எண்.930, உள் (காவல்–15) துறை, நாள் 18.12.2015–ன் மூலம் எனது அரசு ரூ.6.97 கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

2015–ஆம் ஆண்டில், கடல்சார் காவல் நிலையங்களில் 140 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. நடவடிக்கை எடுக்கத்தக்க 140 நுண்ணறிவு தகவல்கள் இதர முகமைகளுக்கு அனுப்பப்பட்டன. மேலும், கடலில் தத்தளித்துக்

கொண்டிருந்த **401** மீனவர்கள் மீட்கப்பட்டனர். **79** படகுகள் மீட்கப்பட்டன. கட்டணமில்லா தொலைபேசி மூலம் **244** அழைப்புகள் பெறப்பட்டன.

கடலோரப் பாதுகாப்புக் குழுமம், கடற்கரைகளில் பாதுகாப்பு ஆயத்தப் பணிகளில் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைய ஆறு மாதத்திற்கு ஒருமுறை பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தமிழ்நாட்டிலுள்ள **13** கடலோர மாவட்டங்களில், கடல் வழியாக ஊடுருவலை இடைமறிக்கும் / தடுக்கும் பாதுகாப்பு முகமைகளின் ஆயத்தப் பணிகளை சோதனைசெய்யும் வகையில், ஆறு மாதத்திற்கு ஒரு முறை, இந்திய கடலோரப் பாதுகாப்புப் படை மற்றும் இதர முகமைகள் ஆகியவற்றுடன்

இணைந்து கடலோரப் பாதுகாப்பு பயிற்சி நடவடிக்கை ஒத்திகை நடத்தப்படுகிறது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், **11.9.2015** மற்றும் **12.9.2015** ஆகிய தினங்களில் கூட்டாக இந்த பயிற்சி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்திய கடற்படை, இந்திய கடலோரக் காவல் படை, மத்திய தொழில் பாதுகாப்புப் படை, மீன்வளத்துறை, கலங்கரை விளக்க அதிகாரிகள், மத்திய புலனாய்வுப் பிரிவு, கடல்சார் வர்த்தகத் துறை, குடியுரிமைப் பிரிவு, சுங்கத்துறை, வனத்துறை, எண்ணெய் மற்றும் இயற்கை வாயு ஆணையம் ஆகிய முகமைகளும், மாநில காவல்துறையின் நுண்ணறிவுப் பிரிவு, கடலோரப் பாதுகாப்புக் குழுமம் ஆகியவையும், உள்ளூர் காவல்துறை, பெரிய மற்றும் சிறு துறைமுகங்களும் இப்பயிற்சி நடவடிக்கையில் கலந்து கொண்டன. இம்முகமைகளைச் சேர்ந்த சுமார் **15,000** பணியாளர்களும், அவர்களது

உடைமைகளும் இப்பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன. இலக்கை ஊடுருவும் முயற்சிகள் முறியடிக்கப்பட்டதுடன், ஊடுருவ முயன்ற நபர்களும் பிடிக்கப்பட்டனர்.

கடலோரப் பாதுகாப்புக் குழுமத்தினர், கடலோரப் பாதுகாப்பு குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரிப்பதில், கடற்படை, கடலோரக் காவல் படை, உள்ளூர் காவல்துறையினர், மீன்வளத் துறை, சுங்கம் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றனர். 2015–ஆம் ஆண்டு, 1,167 தருணங்களில் கடலோர கிராம விழிப்புணர்வுக் குழு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

## கடல்சார் காவல் குழுக்களை பருவமழை வெள்ளக் காலங்களில் பணியில் ஈடுபடுத்துதல்

2015–ம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பொழிந்த கனமழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளத்தின்போது, கடல்சார் காவல் குழு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ரோந்துப் பணி, மீனவர்கள் மீட்பு மற்றும் நிவாரணம், பேரிடர் மேலாண்மைப் பணி மற்றும் விரைவு இடைமறி படகுகள் பராமரிப்பு போன்ற பணிகளில் கடல்சார் காவல் பிரிவிற்கு உதவி புரிய 13 கடலோர மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களால் 500 இளம் மீனவர்கள் கடல்சார் ஊர்க்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## (ஓ) இரயில்வே காவல் படை

இரயில்வே காவல் படையானது, இரயில் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைதியை நிலை நாட்டவும், குற்றங்களைத் தடுக்கவும் மாவட்ட காவல்துறையினருடன் திறமையாக இணைந்து செயலாற்றி வருகிறது. சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி இரயில்வே காவல் மாவட்டங்களில், மொத்தம் 5 உட்கோட்டங்களில், 47 இரயில்வே காவல் நிலையங்களும் 10 இரயில்வே புறக்காவல் நிலையங்களும் உள்ளன.

2015–ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 662 வழக்குகளில் 394 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ரூ.91.05 லட்சம் மதிப்பிலான சொத்துக்கள் மீட்கப்பட்டன.

**2015–**ஆம் ஆண்டில் இரயில் நிலைய வளாகம் அல்லது இரயில்களிலிருந்து மொத்தம் **259** சிறுமிகள் உள்ளிட்ட **1,909** இளஞ்சிறார்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இரயில்களில் மயக்கப் பொருட்களைக் கொடுத்து கொள்ளையடிப்பது குறித்து பயணிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டன. **66,845** கிலோ அளவுக்குப் பொது விநியோக அரிசி கடத்தப்பட்டபோது, அவற்றை இரயில்வே காவல் படையினர் பறிமுதல் செய்துள்ளனர். இராமேஸ்வரம், நெல்லை மற்றும் திருவனந்தபுரம் விரைவு இரயில்களில் மூன்று நகரும் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எழும்பூர், தாம்பரம் மற்றும் பெரம்பூர் இரயில் நிலையங்களில் முன் கட்டணம் செலுத்திப்

பயன்படுத்தக் கூடிய ஆட்டோ மையங்கள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

## (ஓ) <u>சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்</u>

1955–ஆம் ஆண்டைய குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1989–ஆம் ஆண்டைய பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தும் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகளைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு அளிப்பது போன்ற பணிகளையும் இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. தற்போது, 31 மாவட்டங்கள் மற்றும் 6 ஆணையரகங்களில்,

37 நடமாடும் காவல் படைகள் அல்லது சமூக நீதி மற்றும் மனித உரிமை அலகுகள் செயல்பட்டு வருகின்றன. பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் குறித்த கணக்கெடுப்பு மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கென 31 புள்ளியியல் ஆய்வாளர்கள் பல்வேறு அலகுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

1955–ஆம் ஆண்டைய குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், 2015 மற்றும் 2016–ஆம் ஆண்டுகளில் (31.03.2016 வரை) வழக்குகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

2015–ஆம் ஆண்டில், 1989–ஆம் ஆண்டைய பட்டியல் வகுப்பினர் / பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழ் 1,820 வழக்குகளும், 2016–ஆம் ஆண்டில், 31.03.2016 வரை, 414 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.

2015–ஆம் ஆண்டு 35 குற்றவாளிகள் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் புலனாய்வு மேற்கொள்வதற்கென பிரத்யேகமாக 27 காவல் துணை கண்காணிப்பாளர்கள் பதவிகளை உருவாக்க எனது அரசு அரசாணை (நிலை) எண்.934, உள் (காவல்–2) துறை, நாள் 21.12.2015 வெளியிட்டது. இது சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும்.

வன்கொடுமையினால் பாதிப்புக்குள்ளாகக் கூடிய கிராமங்களைக் கண்டறியும் கணக்கெடுப்புப்பணியை சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவினர் மேற்கொள்கின்றனர். வன்கொடுமையைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இது உறுதுணையாக அமைகிறது. 2015–ஆம் ஆண்டு 286 கிராமங்கள் வன்கொடுமை நிகழ வாய்ப்புள்ள கிராமங்களாகக் கண்டறியப்பட்டன.

வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு, மாவட்ட ஆட்சியர்கள் நிதி நிவாரணம் அளிப்பது குறித்த கருத்துருக்களை இப்பிரிவினர் கண்காணித்து வருகின்றனர். 2011 முதல் 2016 வரையிலான காலகட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவிகள் பின்வருமாறு:–

| வ. எண் | வருடம் | வழக்குகள் எண்ணிக்கை | பாதிக்கப்பட்ட வர்கள் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | 2011 | 770 | 1600 | 2.41 |
| 2. | 2012 | 652 | 1120 | 1.89 |
| 3. | 2013 | 746 | 1342 | 3.83 |
| 4. | 2014 | 575 | 979 | 3.88 |
| 5. | 2015 | 810 | 1586 | 5.65 |
| 6. | 2016 (31.03.16 வரை) | 85 | 137 | 0.65 |

## (ஔ) <u>காவல் பணிக்கு உதவிடும் துணைப் பிரிவுகள்</u>

### (i) <u>மோப்ப நாய்ப்படை</u>

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும், மறைத்து வைக்கப்பட்டுள்ள வெடிமருந்துகள் மற்றும் போதைப் பொருட்களைக் கண்டறியவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மோப்ப நாய்ப்படை செயல்பட்டு வருகிறது. சிறப்பு இலக்குப் படை, இரயில்வே காவல் படை மற்றும் அதிரடிப்படை போன்ற சிறப்புப் பிரிவுகளிலும் மோப்ப நாய்ப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட பணிகளுக்காக, மாநிலத்தில் தற்போது 183 மோப்பநாய்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

எனது அறிவிப்பிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் ரூ.35.38 லட்சம் செலவில் நான்கு

புதிய மோப்ப நாய் பராமரிப்பு இடங்கள் கட்டுவதற்காக அரசாணை (நிலை) எண்.879, உள் (காவல்–10) துறை, நாள் 08.12.2015–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**(ii) <u>குதிரைப் படை</u>**

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள காவல்துறை குதிரைப் படையானது, பண்டிகைகள் / ஊர்வலங்கள், பெரிய அளவிலான விளையாட்டு போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளின்போது கூட்டங்களைக் கட்டுப்படுத்தவும், குடியரசு தினவிழா மற்றும் சுதந்திர தினவிழா போன்ற விழா கொண்டாட்டங்களின் போது கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும் ஈடுபடுத்தப்படுகிறது. தற்போது, இப்படையிலுள்ள குதிரைகளின் எண்ணிக்கை 29 ஆகும்.

## (க) <u>காவல் பயிற்சி</u>

### (i) <u>பயிற்சி தலைமையகம்</u>

**1896–**ஆம் ஆண்டு வேலூரில் காவலர் பயிற்சிப் பள்ளி துவக்கப்பட்டு, பின்னர் **1905–**ஆம் ஆண்டு காவலர் பயிற்சிக் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது. இக்காவலர் பயிற்சிக் கல்லூரி **1976–**ஆம் ஆண்டு சென்னை அசோக்நகருக்கு மாற்றப்பட்டது. அதன் பின்னர், காவலர் பயிற்சிக் கல்லூரி, காவல் உயர் பயற்சியகமாகத் தரம் உயர்த்தப்பட்டு, தற்போது வண்டலூார்அருகில் உள்ள ஊனமாஞ்சேரியில் செயல்பட்டுவருகிறது.

வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடியில் உள்ள பேரூரணி, ஆவடி, விழுப்புரம், சேலம் மற்றும் மதுரை ஆகிய எட்டு நிரந்தரக் காவலர் பயிற்சி பள்ளிகளின் பயிற்சி நடவடிக்கைகளைக் கண்காணிக்கும்

தலைமையிடமாகச் சென்னை அசோக் நகரிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இது தவிர, ஒவ்வொரு சரகம் / நகரங்களில் செயல்பட்டு வரும் 13 பணியிடைப் பயிற்சி மையங்களும் காவல்துறை கூடுதல் இயக்குநர், பயிற்சி அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

**எனது அரசு எப்பொழுதுமே காவல் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:**

திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் உள்ள கனகவல்லிபுரத்தில் புதிய காவலர் பயிற்சிப் பள்ளி அமைத்திட, அரசாணை (நிலை) எண்.72, வருவாய் (எல்டி–4(2)) துறை, நாள் 11.02.2015–ன்படி 19.26.5 ஹெக்டேர் வருவாய்த்துறை நிலமானது காவல் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டது.

13–வது நிதிக் குழு மானியத்தின் கீழ் சேலம், காவலர் பயிற்சிப் பள்ளியின் உள்கூட அலுவலகத்தை ரூ.75.95 லட்சம் செலவில் கட்டுவதற்கென அரசு, அரசாணை (நிலை) எண்.310, உள் (காவல்–10) துறை, நாள் 27.03.2015–ன்படி, நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

பயிற்சி நிகழ்வுகளைக் கண்காணிப்பதற்கான மென்பொருள் வாங்குவதற்காக, அரசாணை (நிலை) எண்.277, உள் (காவல்–11) துறை, நாள் 20.03.2015–ன்படி அரசு ரூ.25 லட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

அரசாணை (நிலை) எண்.575, உள் (காவல்–10) துறை, நாள் 05.08.2015–ன்படி, காவல் பயிற்சிக் கல்லூரி, பணியிடைப் பயிற்சி மையங்கள் மற்றும் காவலர் பயிற்சிப் பள்ளிகளில்

பயிற்சி உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக அரசு, முதற்கட்டமாக ரூ.14.58 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### (ii) <u>தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகம்</u>

காவல் உயர்பயிற்சியகமானது, காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் அதற்கு மேலான பதவிகளிலுள்ள அதிகாரிகளுக்குப் பயிற்சி வழங்குவதில் முன்னோடி காவல் பயிற்சி நிறுவனமாக விளங்கி வருகிறது. இதுவரை, 70 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், 1,892 காவல் உதவி ஆய்வாளர்கள், 206 காவல் தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்கள், புதுச்சேரி மற்றும் திரிபுரா மாநிலங்களைச் சார்ந்த 109 காவல் உதவி ஆய்வாளர்கள், 189 தரவு பதிவாளர்கள் உள்ளடக்கிய 20,946 அதிகாரிகளுக்கு இவ்வுயர்பயிற்சியகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 5,407 காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்களுக்குப்

பதவி உயர்வுக்கு முந்தைய பயிற்சியும், காவல் உதவி ஆய்வாளர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான **13,073** அதிகாரிகளுக்குச் சிறப்பு பாடங்கள் / சிறப்பு வகுப்புகள் மூலமாக பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

**2015**–ஆம் ஆண்டு, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் நிலையில் உள்ளவர்களுக்கும் மற்றும் தரவு பதிவாளர்கள் என **2,019** அதிகாரிகளுக்கு இவ்வுயர் பயற்சியகத்தில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**(ங) <u>தொழில்நுட்பப் பணிகள்</u>**

தொழில்நுட்பப் பணிகள் பிரிவானது காவல்துறையினரின் அன்றாட செயல்பாட்டிற்குத்

தேவையான தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து தருவதுடன், இயற்கை சீற்றங்களின் போது கூடுதல் தகவல் தொடர்புகளை வழங்கி வருகிறது. இப்பிரிவில், (அ) தொழில்நுட்பப் பிரிவு (ஆ) செயலாக்கப் பிரிவு என இரண்டு உட்பிரிவுகள் உள்ளன.

தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் கணினிகளைப் பராமரித்தல், புதிய திட்டங்கள் அமலாக்கம் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளின் தர ஆய்வு போன்ற பணிகளை தொழில் நுட்பப் பணிகள் பிரிவினர் கவனித்து வருகின்றனர். இத்தகவல் தொடர்பு வலைபின்னல் அமைப்பானது முற்றிலும் காவல் துறையினரால் செயலாக்கம் செய்யப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. இது குரல் வழி தகவல் அளித்தல் மற்றும் தரவு பரிமாற்றம் ஆகியவற்றை வழங்குகிறது. தகவல் பரிமாற்றத்திற்காக,

அனைத்து காவல்நிலையங்கள் மற்றும் காவல்துறையின் பிறஅலகுகள் பரவலாக்கப்பட்ட வலைப்பின்னல் மூலம் இணைக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப பணிகள் அலுவலக குழுவினர் காவல் துறையின் அனைத்துப் பணியாளர்களுக்கும் ஊதிய விவரங்களைக் குறுஞ்செய்தி மூலம் அனுப்பும் மென்பொருளை வடிவமைத்துள்ளனர். வெளிப்படைத் தன்மைக்காகவும் மற்றும் கணக்குப் பொறுப்புடமைக்காகவும் பணியாளர்களின் ஊதிய விவரங்கள் அவர்களது உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழு கைப்பேசி எண் மூலமாக அனுப்பப்படுகிறது.

**<u>மாநில காவல் தலைமைக் கட்டுப்பாட்டு அறை</u>**

மாநில காவல் தலைமைக் கட்டுப்பாட்டு அறையை அமைப்பதற்காக எனது அரசு,

அரசாணை (நிலை) எண்.889, உள் (காவல்–9) துறை, நாள் 9.12.2015–ன்படி ரூ.11.43 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

மாநில காவல் தலைமைக் கட்டுப்பாட்டு அறையானது குரல் தொடர்பு முறைக்கென ஐ.பி.–அடிப்படையிலான உள்ளக உபகரணங்கள் கொண்ட வசதிகளையும், ஜிஐஎஸ் இலக்கமுறை / வரைபட முடிவுகளை கணினி உதவியுடன் அனுப்பும் முறை (CAD), தானியங்கி அழைப்பு விநியோகம் (ACD), குரல் பதிவு வசதி, ஜிபிஎஸ்/ஜிபிஆர்எஸ் அடிப்படையிலான வாகனம் இருக்கும் இடத்தை தெரிவிக்கும் முறை மற்றும் பொது மக்களுக்கு 24x7 என்ற அடிப்படையில் உடனடியான மற்றும் காலப்படியான உதவிகளை வழங்குவதற்கான கைப்பேசி செயலி தீர்வுகள் (SOS) ஆகிய நவீன வசதிகளை கொண்டதாக இருக்கும்.

## (ச) மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல், இருப்பில் வைத்திருத்தல் மற்றும் கள்ளச்சாராய விற்பனை ஆகியவற்றை ஒழிக்கவும், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் கடத்தப்படுவதைத் தடுக்கவும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

மாநிலத்தில் **96** மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. காவல் ஆய்வாளர் தலைமையில் இயங்கும் இப்பிரிவின் அலகுகள், தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம், **1937–**ஐ அமல்படுத்துவதற்காக, காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டு, மாவட்டங்களிலும்,

நகரங்களிலும் காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன.

அண்டை மாநிலங்களிலிருந்து போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் மற்றும் சாராயப் பாக்கெட்டுகள் கொண்டு வருவதைத் தடுப்பதற்கு, தற்போது மாநிலத்தில் **45** மதுவிலக்கு சோதனைச் சாவடிகள் உள்ளன. இவை தவிர, நாகப்பட்டினம் (இரண்டு நகரும் சோதனைச் சாவடிகள்), கடலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் ஏழு நகரும் சோதனைச் சாவடிகள் செயல்பட்டு வருகின்றன.

அமலாக்கப்பிரிவு தலைமையகத்தில் அமைந்துள்ள மத்திய புலனாய்வுப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் அரசால், மதுவிலக்கு தொடர்பான கட்டணமில்லா தொலைபேசி சேவை எண்.10581 ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகவலாளிகள் மற்றும் பொதுமக்கள், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், எரி சாராயம் கடத்துதல், போலி மதுபானம், கள்ளச்சாராய விற்பனை ஆகிய மதுவிலக்கு குற்றங்கள் குறித்த தகவல்களைக் கட்டணமில்லாமல் தெரிவிப்பதற்காக இவ்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டணமில்லா தொலைபேசி 24 மணி நேரமும் ஆட்களைக் கொண்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

2015–2016–ஆம் ஆண்டில் (31.03.2016 வரை), 377 மதுவிலக்கு கொடுங்குற்றவாளிகள் 1982–ஆம் ஆண்டைய தமிழ்நாடு சட்டம் 14 (கள்ளச்சாராயக்காரர்கள் தடுப்புச் சட்டம்)–ன்கீழ்

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். மேலும், வழக்கமாக மதுவிலக்குக் குற்றங்களைப் புரிந்து வந்த 750 நபர்களுக்கு எதிராக தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (வெளியேற்றுதல்) பிரிவு 52–(இ)–ன் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2015–2016–ஆம் நிதியாண்டில், இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானத்தைக் கள்ளத்தனமாக கடத்துதல் / விற்பனை செய்தல், போலி மற்றும் கலால் வரி செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு வெளிநாட்டு மதுபானத்தை கள்ளத்தனமாக விற்பனை செய்தல் / எரிசாராயம் விற்பனை செய்தல் மற்றும் காய்ச்சுதல், கள்ளச்சாராயம் கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டு வந்த முன்னாள் மதுவிலக்கு குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக, 15.12.2015 நாளிட்ட

அரசாணை (நிலை) எண். 34, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் கீழ் ஐந்து கோடி ரூபாய் மறுவாழ்வு நிதிக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1,667 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

**<u>மாநில அளவிலான விழிப்புணர்வு பிரச்சாரம்</u>**

விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீட்டை ரூ.1 கோடியிலிருந்து ரூ.3 கோடியாக உயர்த்திட எனது அரசு, அரசாணை (நிலை) எண்.33, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை, நாள் 30.11.2015–ன்படி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மாநிலம் முழுவதும், இவ்விழிப்புணர்வு பிரச்சாரங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது.

## (ஞ) <u>ஊர்க்காவல் படை</u>

தமிழ்நாடு ஊர்க்காவல் படை அமைப்பானது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் காவல் துறையினருக்கு உதவி புரியவும், வெள்ளம், தீ விபத்து, புயல் போன்ற அவசர கால நிகழ்வுகளை சமாளிக்கவும், **1963–**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊர்க்காவல் படைவிதிகள், **1963–**ன் படி, ஒரு தன்னார்வ குடிமக்கள் படையாக உருவாக்கப்பட்டது. போக்குவரத்தை சீர்படுத்துதல், கூட்டங்களைக் கட்டுப்படுத்துதல், உள்நாட்டுப் பாதுகாப்பைப் பராமரித்தல், மத நல்லிணக்கத்தைப் பேணுதல், உடல் ஆரோக்கியம், சுகாதாரம், போதைப் பொருட்கள் பயன்படுத்துவதன் விளைவு, எய்ட்ஸ் உயிர்க்கொல்லி நோய் மற்றும் சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற முக்கிய பணிகளில் இப்படை உதவி புரிந்து

வருகிறது. தற்போது, 142 ஊர்க்காவல் படை அணிகள் (116.5 ஆண்கள் அணி மற்றும் 25.5 பெண்கள் அணி) செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 2,805 மகளிர் ஊர்க்காவல் படையினர் உட்பட மொத்தம் 15,622 ஊர்க்காவல் படையினர் பணியாற்றி வருகின்றனர். அனைத்து மாவட்டங்கள் மற்றும் காவல் ஆணையரகங்களில் மகளிர் பிரிவு உள்ளிட்ட ஊர்க்காவல் படையின் அலகுகள் உள்ளன. 2016–ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலின்போது, 14,388 ஊர்க்காவல் படையினர் பாதுகாப்புப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டார்கள்.

சென்னை, மாமல்லபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலியில் குடிமைப் பாதுகாப்பு அலகுகளை உருவாக்க அரசு ரூ.89 லட்சம் ஒப்புதல் அளித்துள்ளது.

ரூ.1.92 கோடி மதிப்பீட்டில், பழனியில், குடிமைப் பாதுகாப்பு பயிற்சி மையத்தை உருவாக்க அரசு நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் அளித்துள்ளது. அப்பயிற்சி மையத்திற்கான கட்டுமானப்பணி 2014–ஆம் ஆண்டு நிறைவடைந்துள்ளது. திருப்பூர், கிருஷ்ணகிரி மற்றும் அரியலூரில் ஊர்க்காவல் படை அலகுகளுக்கான புதிய கட்டடங்களைக் கட்ட இவ்வரசு ரூ.45 லட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றின் கட்டுமானப் பணி 2015–ல் நிறைவடைந்துள்ளது.

எனது அறிவிப்பிற்கிணங்க, அரசாணை (நிலை) எண்.875, உள் (நவீனமயமாக்கல்) துறை, நாள் 07.12.2015–ன்படி ஊர்க்காவல் படையினர் சிறப்புறச் செயல்படுவதற்காக ரூ.5.23 லட்சம் செலவில் ஒளி பிரதிபலிப்பு பொதியுறைகள் (Reflective Jackets), ஒளிர் விளக்குகள் (Baton Lights) மற்றும் கம்பி ரம்ப இயந்திரங்கள்

(Wire Saw Machines) ஆகியன வாங்குவதற்கான ஒப்பளிப்பு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ. 24.97 லட்சம் செலவில் ஊர்க்காவல் படை அலுவலகத்திற்கான புதிய கட்டிடம் கட்டுவதற்காக அரசாணை (நிலை) எண்.879, உள் (காவல்–10) துறை, நாள் 08.12.2015–ன்படி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், எனது அறிவிப்பிற்கிணங்க, ஊர்க்காவல் படையினருக்குப் பல்வேறு நிதி மானியம் வழங்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2015–ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இதற்கு முன் நிகழ்ந்திராத அளவுக்குப் பெய்த பருவமழையின் போது, ஊர்க்காவல் படையினர், மீட்பு மற்றும் நிவாரணப்

பணிகளில் நிருவாகத்தினருக்கு பெரிதும் உதவிகரமாக இருந்தனர்.

## (ட) <u>தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படை</u>

எனது அரசு, அரசாணை (நிலை) எண் 432, உள் (காவல்–14) துறை, நாள் 01.07.2013–ல் காவல் இளைஞர் படைப் பிரிவினை அமைப்பதற்கான ஆணையினை வெளியிட்டது. 2013–ஆம் ஆண்டைய தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படையினர் சட்டம், இளைஞர் படையினர் காவல் துறையினருக்கு உதவி புரிய வழிவகை செய்கிறது. தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படை வீரர்களுக்கான தேர்வினை தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் நடத்தியது. 12.02.2014 அன்று, சம்பந்தப்பட்ட காவல் கண்காணிப்பாளர்கள் / காவல் துணை ஆணையர்கள், 9,079 தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை

வழங்கினர். புதிதாக தேர்வு செய்யப்பட்ட தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படை வீரர்களுக்கு அடிப்படை பயிற்சி வகுப்புகள் அந்தந்த மாவட்ட மற்றும் மாநகர ஆயுதப்படையில் வழங்கப்பட்டு, **11.03.2014** அன்று தங்களது பயிற்சியை நிறைவு செய்தனர். **2015**–ஆம் ஆண்டு, **8,500** இளைஞர் படை பணியாளர்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட எழுத்து தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் இரண்டாம் நிலை காவலர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்களுக்கான பயிற்சி **26.02.2016** அன்று துவங்கப்பட்டது. இது **02.10.2016** அன்று முடிவடைய உள்ளது.

## X **வாகன வசதி**

**31.03.2016–ன்படி, கீழ்க்கண்டவாறு காவல்துறையில் 17,087 வாகனங்கள் உள்ளன.**

| | | |
|---|---|---|
| கனரக வாகனங்கள் | : | பேருந்து / லாரி – **847** |
| மிதரக வாகனங்கள் | : | சிற்றுந்து / வேன் **– 1,743** |
| இலகு வாகனங்கள் | : | மகிழுந்து / ஜீப் – **5,747** |
| இரு சக்கர வாகனங்கள் | : | மொபெட் / மோட்டார் சைக்கிள் – **8,449** |
| இதர வாகனங்கள் | : | வஜ்ரா / கிரேன் / கைதிகள் வழிக்காவல் / வாட்டர் கேனன் / ஆம்புலன்ஸ் / ரெக்கர் **– 301** |

**கடந்த ஓராண்டு காலத்தில், ரூ.26.44 கோடி மதிப்பில், 1,542 புதிய வாகனங்கள் (பேருந்து–8 / சிற்றுந்து–20 / ஜீப்–165/ டெம்போ டிராவலர்–2 / மோட்டார் சைக்கிள்–1,303 / அனைத்துப் பரப்பிலும் ஓட்டக்கூடிய ஜீப்பு–12,**

அனைத்துப் பரப்பிலும் ஓட்டக்கூடிய மோட்டார் சைக்கிள்–12 / பிரச்சார வேன்–12 / தண்ணீர் டேங்கர் லாரி–2 / ரெக்கர்–1 / ஆம்புலன்ஸ்–2 / வஜ்ரா–1 / வாட்டர் கேனன்–1 / திறந்தநிலை லாரி–1) தமிழ்நாடு காவல்துறைக்கென வாங்கப்பட்டுள்ளன.

## XI <u>காவலர் வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள்</u>

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகமானது, காவல்துறையின் அனைத்து கட்டுமானப் பணிகள் மற்றும் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. காவல் துறை பணியாளர்களுக்குச் சொந்த வீடு கட்டித்தரும் நலத்திட்டத்தைச் செயல்படுத்தும் முக்கிய நோக்கத்தோடு அரசாணை (நிலை) எண்.2500, உள் துறை, நாள் 27.09.1980–ன்படி தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம்

உருவாக்கப்பட்டது. இக்கழகம் 1989–ஆம் ஆண்டு, அப்போதைய அரசால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துடன் இணைக்கப்பட்டது. பின்னர் 21.11.1991–ல் எனது அரசால் இக்கழகத்திற்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டது.

காலப்போக்கில், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை மற்றும் சிறைத்துறை பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணிகளும் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, இக்கழகத்தின் பணிகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டன. அதன் பின்னர், காவல் நிலையங்கள் மற்றும் இதர காவல்துறைக் கட்டடங்கள் கட்டுவதற்கான பணிகளும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

தமிழ்நாடு காவலர் வீட்டுக் வசதி கழகமானது, 42,619 காவலர் குடியிருப்புகளையும், தீயணைப்பு மற்றும் மீட்புப் படை பணியாளர்களுக்கு 1,107 குடியிருப்புகளையும், சிறைத்துறைப் பணியாளர்களுக்கு 1,225 குடியிருப்புகளையும், 715 காவல் நிலையங்களையும், 574 ஓய்வு அறைகளையும் / விருந்தினர் இல்லங்களையும், 16 மாவட்டக் காவல் அலுவலகங்களையும், 15 ஆயுதப்படை பிரிவு வளாகங்களையும், 27 தங்குமிடங்களையும், 153 மோப்ப நாய் பராமரிப்பு இடங்களையும், 20 தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை அலுவலகங்களையும், 5 தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை சிறப்புப் பிரிவு அலுவலகங்களையும், 6 நவீன கட்டுப்பாட்டு அறைகளையும், 5 மண்டல தடய அறிவியல்துறை ஆராய்ச்சி கட்டடங்களையும், 21 ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்

நிலையங்களையும், 4 காவல்துறை துணைத்தலைவர் சரக அலுவலகங்களையும், 4 காவல்துறை தலைவர் மண்டல அலுவலகங்களையும், 5 நகர காவல் அலுவலகங்களையும் கட்டி முடித்ததோடு மட்டுமல்லாமல், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் இதுவரையில், 4,644 குடியிருப்புகளையும் கட்டி முடித்திருக்கிறது. 2011–ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2016–ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில், 13,034 காவலர் குடியிருப்புகள், 345 காவல் நிலையங்கள் மற்றும் 201 பிற கட்டிடங்களைக் கட்டியுள்ளது.

**உங்கள் சொந்த இல்லம் திட்டம்**

எனது அரசு "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதை ஊக்கப்படுத்தியுள்ளது. இதற்கான முன்னோடித்

திட்டமாக காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் 2,673 வீடுகள் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு அப்பணிகள் நிறைவு பெற்று அவை என்னால் 25.02.2016 அன்று திறந்து வைக்கப்பட்டன.

மேலக்கோட்டையூரில் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு கிடைக்கப் பெற்ற 1,682 காவல் பணியாளர்கள், 66 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைப் பணியாளர்கள் மற்றும் 35 சிறைத்துறைப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி கடன் முன்பணம் வழங்குவதற்காக ரூ.287.96 கோடி அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் (பொலுபள்ளி), சிவகங்கை மாவட்டம் (பையூர் பிள்ளைவயல்), தஞ்சாவூர் மாவட்டம் (வல்லம்), விருதுநகர் மாவட்டம் (ஆனையூர்) மற்றும் அரியலூர் மாவட்டம்

(வாலாஜாநகரம்) ஆகிய 5 மாவட்டங்களிலும் “உங்கள் சொந்த இல்லம்” திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான நிலங்களை ஒதுக்கீடு செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. நில நிர்ணயம் செய்தல் மற்றும் தேவை அளவு ஆய்வு செய்தல் ஆகியன நடைபெற்று வருகின்றன.

தருமபுரி, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, கடலூர், நாமக்கல், சேலம், தேனி, திருவண்ணாமலை மற்றும் திருவாரூர் ஆகிய 9 மாவட்டங்களிலும் இத்திட்டத்திற்கான நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## XII **காவலர் பணிகளில் தேர்வு, பதவி உயர்வு மற்றும் நிலை உயர்த்துதல்**

### (அ) **தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்**

காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத் துறை ஆகியவற்றிற்கு தகுந்த சீருடை சார்நிலை பணியாளர்களை நியமிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் **1991–**ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எனது அரசால் உருவாக்கப்பட்டது. காவல் உதவி ஆய்வாளர், தொழில்நுட்பப் பிரிவு உதவி ஆய்வாளர், விரல்ரேகை பிரிவு உதவி ஆய்வாளர், இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக்காவலர், தீயணைப்புப் படை வீரர் மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படை பதவிகளுக்கான பணி நியமனங்களை தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் செய்து

வருகிறது. தமிழ்நாடு அரசு வழிமுறைகளை பின்பற்றி, பாரபட்சமற்ற முறையிலும், தகுதியின் அடிப்படையிலும் பணியாளர் தேர்வை இவ்வாரியம் நடத்தி வருகிறது.

2015–ஆம் ஆண்டு 1,078 காவல் உதவி ஆய்வாளர்கள் (தாலுகா) தேர்வுக்கான அறிவிக்கை தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் 08.02.2015 அன்று வெளியிடப்பட்டது. வாரியம், எழுத்துத் தேர்வு, சான்றிதழ் சரிபார்த்தல் போன்றவற்றை நடத்தி, 1,078 காவல் உதவி ஆய்வாளர்கள் (தாலுகா) பதவிக்குத் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்டவர்கள் பற்றிய முடிவுகளை 15.11.2015 அன்று வெளியிட்டது.

2013–2014 ஆண்டில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் தமிழ்நாடு சிறப்புக்

காவல் இளைஞர் படைக்கான தேர்வை நடத்தியது. இவ்வாரியம், **29.11.2015** அன்று தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையினரை தமிழ்நாடு சிறப்புக் காவல் அணியில் சேர்த்து கொள்வதற்கான எழுத்து தேர்வை நடத்தியது. இத் தேர்வின் மூலம் **8,500** சிறப்புக் காவல் இளைஞர் படையினர் தமிழ்நாடு சிறப்புக் காவல் அணியில் இரண்டாம் நிலைக் காவலர்களாகச் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் நியாயமான மற்றும் முறைப்படியான தேர்வு முறையை நடத்தி மிகவும் வெளிப்படையான தன்மையோடு தேர்வுகளைச் செய்து வருகிறது. உடல் தகுதி அளவீடு சோதனையின்போது டிஜிட்டல் சாதனங்களைப் பயன்படுத்தி வெளிப்படைத் தன்மையை மேலும் அதிகரித்து வருகிறது. உடல் தகுதி அளவீடு

தேர்வின்போது, அளவீடுகளைக் கணக்கிடுவதற்காக உயரம் மற்றும் மார்பளவுகளை அளக்கும் டிஜிட்டல் சாதனங்களைத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் கொள்முதல் செய்துள்ளது. இவ்வாரியம், 2015–ஆம் ஆண்டு 1,078 காவல் உதவி ஆய்வாளர்கள் (தாலுகா) தேர்வில் உடல் தகுதி அளவீடு சோதனையின்போது டிஜிட்டல் சாதனங்களைக் கொண்டு உயரம் மற்றும் மார்பு அளவீடுகளைக் கணக்கிடும் முறையை முதன்முறையாகப் பயன்படுத்தியுள்ளது.

இவ்வாரியம், இணையவழி விண்ணப்பிக்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. 2015–ஆம் ஆண்டு 1,078 காவல் உதவி ஆய்வாளர்களை (தாலுகா) தேர்வு செய்யும் பணியில் இணையவழி விண்ணப்ப முறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்திற்காக விசாலமான மற்றும் நவீன கட்டடம் கட்டுவதற்கு எனது அரசு நிதி ஒதுக்கீடு செய்து, புதிய கட்டடமானது **24.05.2015** அன்று என்னால் திறந்து வைக்கப்பட்டது.

## (ஆ) பதவி உயர்வு மற்றும் நிலை உயர்த்துதல்

**01.01.2015** முதல் **30.06.2016** வரையிலான காலத்தில், **42** இந்தியக் காவல் பணி அலுவலர்கள், **30** தமிழ்நாடு காவல் பணி அலுவலர்கள், **289** தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி அலுவலர்கள் மற்றும் **266** தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்கள்ஆகியோர் தத்தமது பணிகளில் அடுத்த நிலைக்குப் பதவி உயர்வு பெற்றனர். மேலும், இக்கால கட்டத்தில் **2,399** இரண்டாம் நிலைக் காவலர்கள், முதல்நிலைக் காவலர்களாகவும், **821** முதல்நிலை காவலர்கள், தலைமைக்காவலர்களாகவும்,

**1,246** தலைமைக் காவலர்கள், உதவி ஆய்வாளர்களாகவும் மற்றும் **249** தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்களாகவும் பதவி உயர்வு பெற்றனர். கடந்த ஓராண்டில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக **238** அமைச்சுப் பணியாளர்கள் காவல்துறையில் நேரடி நியமனம் மூலம் பணியில் சேர்ந்தனர்.

எனது அரசு, அரசாணை (நிலை) எண்.**249,** உள் (காவல்–**3**) துறை, நாள் **29.02.2016**–ல், **2006**–ஆம் ஆண்டு நேரடியாக நியமனம் செய்யப்பட்ட காவல் உதவி ஆய்வாளர்கள் (ஆயுதப் படை / தமிழ்நாடு சிறப்புக் காவல்) வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளதன்படி காவல் உதவி ஆய்வாளர்களாக (தாலுகா) நியமனம் செய்யப்படுவர் என உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதன்படி, அவர்கள் நகரங்கள் / மாவட்டங்களில் ஆறுமாதகால நடைமுறைப் பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்படுவார்கள்.

## XIII **அகில இந்திய காவல் போட்டிகள் சாதனைகள் மற்றும் அங்கீகாரம்**

### (அ) **அகில இந்திய காவல் சுழல் துப்பாக்கி மற்றும் சுழல் கைத்துப்பாக்கி / கைத்துப்பாக்கி சுடும் போட்டி**

16–வது அகில இந்திய காவல் சுழல் துப்பாக்கி மற்றும் சுழல் கைத்துப்பாக்கி / கைத்துப்பாக்கி சுடும் போட்டி–2015, அஸ்ஸாம், திபுவில் உள்ள அஸ்ஸாம் சுழல் துப்பாக்கி பயிற்சி மையம் மற்றும் பள்ளியில் **05.12.2015** முதல் **09.12.2015** வரையில் நடைபெற்றது. தமிழ்நாடு அதிரடிப்படை ஆளிநர்கள் மற்றும் தமிழ்நாடு துப்பாக்கி சுடும் அணி இப்போட்டியில் கீழ்க்கண்ட வெற்றிகளை ஈட்டியது:

- மாநிலங்களுக்கிடையில் ஒட்டுமொத்தமாக முதலிடத்தில் வெற்றி பெற்றது.
- சிறு துப்பாக்கி சுடும் போட்டியில் இரண்டாம் இடம் மற்றும் ஒட்டு மொத்த முதலிடம் (அணிகள் நிகழ்வு).
- கைத்துப்பாக்கி சுடும் போட்டியில் இரண்டாம் இடம் மற்றும் ஒட்டு மொத்த முதலிடம்.
- தனி நபர் வெள்ளிப் பதக்கம்.

## (ஆ) <u>அகில இந்திய காவல் துப்பாக்கி சுடுதல் (விளையாட்டு)</u>

9–வது அகில இந்திய துப்பாக்கி சுடுதல் (விளையாட்டு) போட்டி–2015, ஹரியானா மாநிலம், காதர்பூரில் உள்ள மத்திய ஆயுதப்படைப் பிரிவு துப்பாக்கி சுடும் சரகத்தில் **26.10.2015** முதல் **30.10.2015** வரை நடைபெற்றது. தமிழ்நாடு

அதிரடிப் படையால் பயிற்சியளிக்கப்பட்ட மூன்று பெண் காவல் ஆளிநர்கள், அணிப் போட்டியில் கலந்து கொண்டு வெண்கலப் பதக்கம் வென்றனர்.

## (இ) 58–வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டிகளில் தமிழ்நாடு காவல் குழுவினரின் சாதனைகள்

58–வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டிகள்–2014, பஞ்சாப் மாநிலம் பில்லாவூரிலுள்ள பஞ்சாப் காவல் உயர் பயிற்சியகத்தில் 24.03.2015 முதல் 29.03.2015 வரை நடைபெற்றது. குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையால் பயிற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு காவல் படைப் பிரிவினர், புலன் விசாரணையில் அறிவியலின் பங்கு, கணினி விழிப்புணர்வு, தொழில் ரீதியிலான நிழற்படக்கலை, காணொலிக்கலை, நாசவேலைத்

தடுப்பு சோதனை மற்றும் காவல்துறையின் மோப்ப நாய்களுக்கான போட்டிகள் ஆகிய ஆறு போட்டிகளில் கலந்து கொண்டு, **6** தங்கப் பதக்கங்கள், **4** வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் **1** வெண்கலப் பதக்கம் உட்பட **11** பதக்கங்களை வென்றுள்ளனர். இப்படைப் பிரிவினர், புலன் விசாரணையில் அறிவியலின் பங்கு பிரிவில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களையும், சிறந்த மாநில/மத்திய காவல் அமைப்புகள்/யூனியன் பிரேதசக் குழுவிற்கான ''ஆந்திர மாநில முதலமைச்சரின் கோப்பை''யையும் பெற்றது உட்பட **3** கோப்பைகளையும் வென்றுள்ளனர்.

### (ஈ) <u>59—வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டிகளில் தமிழ்நாடு காவல் குழுவினரின் சாதனைகள்</u>

**59—**வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டிகள்—**2015,** ஹரியானா மாநிலம், பானு, பஞ்ச்குலாவிலுள்ள இந்தோ—திபெத்தியன் எல்லை

காவல் படையின் அடிப்படை பயிற்சி மையத்தில் 27.11.2015 முதல் 01.12.2015 வரை நடைபெற்றது. குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையால் பயிற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு காவல் படைப்பிரிவினர், புலன் விராசாணையில் அறிவியலின் பங்கு, கணினி விழிப்புணர்வு, தொழில் ரீதியிலான நிழற்படக்கலை, காணொலிக்கலை, நாசவேலைத் தடுப்பு சோதனை மற்றும் காவல்துறையின் மோப்ப நாய்களுக்கான போட்டிகள் ஆகிய ஆறு போட்டிகளில் கலந்து கொண்டு, 7 தங்கப் பதக்கங்கள், 4 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 5 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 16 பதக்கங்களை வென்றுள்ளனர். இப்படைப் பிரிவினர், புலன் விசாரணையில் அறிவியிலின் பங்கு பிரிவில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களுக்கான கோப்பை, தொழில் ரீதியிலான நிழற்படக்கலைப் பிரிவில் இரண்டாம்

இடத்திற்கான கோப்பை, சிறந்த மோப்ப நாய்க்கான கோப்பை, சிறந்த மாநில/மத்திய காவல் அமைப்புகள்/யூனியன் பிரேதசக் குழுவிற்கான “ஆந்திர மாநில முதலமைச்சரின் கோப்பை” என 5 கோப்பைகளை வென்றுள்ளனர்.

பல்வேறு போட்டிகளில் மிகச்சிறந்த முறையில் செயலாற்றும் வகையில், காவல் குழுவினரை ஊக்கப்படுத்த, **26.02.2016** அன்று, **134** காவல் பணியாளர்களுக்கு மொத்தம் ரூ.**1,46,80,000/–** பண வெகுமதி என்னால் வழங்கப்பட்டது.

## XIV <u>தடய அறிவியல் துறை</u>

முன்னர் மருத்துவத் துறையின் கீழ்செயல்பட்டு வந்த “ரசாயன பரிசோதகர்களின்ஆய்வகம்” **(1849)**, மதுவிலக்கு மற்றும் கலால் ஆய்வகம் **(1886)** மற்றும் காவல்

துறையின் கீழ்செயல்பட்டு வந்த அறிவியல் பிரிவுகள் **(1905)** ஆகியவற்றை ஒருங்கிணைத்து தமிழ்நாடு தடய அறிவியல் பரிசோதனைக்கூடம் **1959**–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. **1984**–ஆம் ஆண்டு இந்த ஆய்வகம் தடய அறிவியல் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இத்துறையின் முதன்மை குறிக்கோளானது, நீதியைச் சிறந்த முறையில் நிலைநாட்ட தடய அறிவியல் சேவை புரிவதேயாகும்.

## துறையின் அமைப்பு

### (அ) தலைமை ஆய்வகம்

இத்துறையானது மானுடவியல், துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல், கணினி தடயவியல், மரபணு ஆய்வு, ஆவண ஆய்வு, கலால், வெடிபொருள் ஆய்வு, போதைப்பொருள் ஆய்வு, இயற்பியல், மதுவிலக்கு பொருட்கள்

ஆய்வு, குருதி வடிநீரியல் மற்றும் நஞ்சியல் ஆகிய 14 சிறப்பு பகுப்பாய்வுப் பிரிவுகளை உள்ளடக்கிய தலைமை ஆய்வகத்தைச் சென்னையில் கொண்டுள்ளது. பல்வேறு சிறப்பு பகுப்பாய்வு பிரிவுகளில் இருந்து பகுப்பாய்வு செய்வதற்காக பெறப்பட்ட குற்றச் சான்றுகளை ஆவணப்படுத்த தனியாகப் புகைப்பட பிரிவு ஒன்று உள்ளது. தலைமை ஆய்வகத்தில் வரவேற்பறை, உபகரணங்கள் மற்றும் கிடங்கு பிரிவுகளும் உள்ளன.

### (ஆ) <u>வட்டார தடய அறிவியல் ஆய்வகம்</u>

கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய ஒன்பது இடங்களில் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

### (இ) நகரும் தடய அறிவியல் ஆய்வகங்கள்

புலன் விசாரணை அதிகாரிகளுக்கு அறிவியல் சார்ந்த சேவைகளை வழங்குவதற்காக சென்னையில் இரண்டும், **31** காவல் துறை மாவட்டங்கள் / ஆணையரகங்களுக்குத் தலா ஒன்று வீதம் மொத்தம் **33** நகரும் தடய அறிவியல்ஆய்வகங்கள் உள்ளன.

### (ஈ) பகுப்பாய்வு திறனை பலப்படுத்துதல்

எனது அறிவிப்பிற்கிணங்க, அரசாணை (நிலை) எண்.193, உள் (நவீனமயமாக்கல்) துறை, நாள் **25.02.2015**–ன்படி திசுக்களிலிருந்து மரபணுவை கோல்ட் பிளேட்டட் பாலிமரைஸ்ட் செயின் ரியாக்ஷன் இயந்திரம் மூலமாக எடுப்பதற்காக உபகரணப் பெட்டியுடன் கூடிய பதப்படுத்தும் மைக்ரோ சென்ட்ரிபியூஜ் வாங்குவதன் மூலம் சென்னை, தடய அறிவியல்

துறையிலுள்ள மரபணு ஆய்வகப் பிரிவின் திறனை மேலும் பலப்படுத்தும் வகையில், ரூ.40 லட்சம் ஒப்பளிப்பு செய்ய ஆணை வழங்கப்பட்டது. இந்த இயந்திரம் வாங்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேலும், சென்னை தலைமை ஆய்வகத்திலுள்ள கணினி தடய அறிவியல் பிரிவு, உயிரியல் பிரிவு, மரபணு சோதனை பிரிவு மற்றும் தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் உள்ள வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் ஆகியவற்றில் பகுப்பாய்வு வசதிகளை மேம்படுத்த 2014–2015–ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டத்தின் கீழ் ரூ.30 லட்சம் வழங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இந்தப் பொருட்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

மேலும், எனது அறிவிப்பிற்கிணங்க, 07.12.2015 நாளிட்ட அரசாணை (நிலை)

எண்.875, உள் (நவீனமயமாக்கல்) துறை— ன்படி, காவல்துறையின் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் தடய அறிவியல் துறைக்கு, உடல்சார்ந்த சாட்சிகளின் உலோகங்களை அளவிட மேஜை மீது வைக்கப்படும் ஒளிரும் ஊடுகதிர் (XRF) பகுப்பாய்வுக் கருவி, வெடிமருந்து பொருட்களைக் கண்டுபிடிக்க மின்துகள் அளகீடு செய்யும் கருவி மற்றும் குற்றங்களில் ஈடுபடும் பேச்சாளரை அடையாளம் காணும் பொருட்டு பேச்சை விஞ்ஞான ரீதியில் கண்டுபிடிக்கும் தடய அறிவியல் கருவி ஆகியவற்றை வாங்குவதற்கு அரசு ரூ.86 லட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

மேலும், தடய அறிவியல் துறைக்கு அரசாணை (நிலை) எண்.112, 113 மற்றும் 114, உள் (காவல்—18) துறை, நாள் 08.02.2016—ன்படி ரூ.1.11 கோடி மதிப்பில், மரபணு பகுப்பாய்விற்காக எலும்பு மாதிரிகளைப் பாதுகாக்க தற்காலிக

குளிர்சாதன அறை, மனமயக்கப் பொருட்களைக் கண்டுபிடிக்க வாயு அடங்கிய வண்ணப்பட்டை மானி, 15 ஆய்வகப் பிரிவுகளை சிறந்த முறையில் கண்காணிக்க 18 மின்னணு கண்காணிப்பு கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்கும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**<u>போற்றத்தக்க சாதனைகள்</u>**

எவ்வித சவால்களையும் சந்திக்கும் திறனை மேம்படுத்துவதற்காக, நாள்தோறும் மேற்கொள்ளப்படும் பகுப்பாய்வில் தற்சமயமுள்ள நவீன யுக்திகளை நடைமுறைப்படுத்துவதில் இத்துறையானது முன்னோடியாக உள்ளது.

இந்தியக் கடலோரப் படையைச் சேர்ந்த காணாமல் போன விமானப் பணியாளர்களின் கைப்பற்றப்பட்ட எலும்புத் துண்டுகளைக் கொண்டு, மரபணு சோதனை மூலம் அவர்களை

அடையாளம் கண்டுபிடித்ததன் மூலம் ஓர் அரும் பணியை தடய அறிவியல் துறை செய்துள்ளது.

**2015**–ஆம் ஆண்டில், இத்துறையில் **65,988** குற்ற வழக்குகளில் தொடர்புடைய **2,62,972** சாட்சியப் பொருட்கள் பரிசோதனை செய்யப்பட்டன. **2016**–ஆம் ஆண்டு, **31.03.2016** வரையிலான காலத்தில், **15,822** குற்ற வழக்குகளில் தொடர்புடைய **65,459** பொருட்கள் பரிசோதனை செய்யப்பட்டு, அதன் கண்டுபிடிப்புகள் புலன் விசாரணைக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததோடு, நீதி வழங்கிட பெரிதும் உதவிகரமாகவும் அமைந்தன.

## XV **முடிவுரை**

காவல்துறையினர் உயரிய மன உறுதியுடன் கடமையாற்றிடும் வகையில், எனது தலைமையிலான அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது

என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். காவல் பணி என்பது கணிக்கமுடியாத பலவகையான இடர்களை உள்ளடக்கிய சவாலான பணியாகும். சிறப்பான அறிவு மற்றும் திறன்களை தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்நாடு காவல்துறையானது முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. அதே சமயத்தில், மனிதாபிமான அணுகுமுறை மற்றும் மானிட நற்பண்புகளை இத்துறை கட்டிக்காத்து வருகிறது. பொதுமக்களின் தேவைகளை உணர்ந்து, அவற்றை நிறைவேற்றிடப் பணியாற்றும் காவல்துறை, சட்டத்தை மீறுவோர் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழக காவல்துறையின் தொழில்சார்ந்த பண்பில் திறமையும், ஆற்றலும் ஒருங்கே அமையப் பெற்றுள்ளன. அமைதி, நிலைத்தன்மை மற்றும் பொது ஒழுங்கு ஆகியன மாநிலத்தின்

வளர்ச்சிக்கு இன்றியமையாதவை என்ற கொள்கையை உள்வாங்கி, அந்த இலக்கை நோக்கி நம்பிக்கையுடன் வெற்றிப் பாதையில் தொடர்ந்து தமிழகக் காவல்துறை சிறப்பாக பணியாற்றி வருகிறது.

**ஜெ ஜெயலலிதா**
**முதலமைச்சர்**

## பிற்சேர்க்கை – I


# 2013 முதல் 2015 வரையிலான சொத்து தொடர்பான வழக்குகளும், கண்டுபிடிப்பும்

| வ. எண் | குற்றத்தின் தலைப்பு | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவு | க.பி | பதிவு | க.பி | பதிவு | க.பி |
| 1. | ஆதாயக் கொலை | 121 | 96 | 127 | 108 | 107 | 91 |
| 2. | கூட்டுக் கொள்ளை | 83 | 78 | 101 | 98 | 93 | 89 |
| 3. | வழிப்பறி (உடைமை பறிப்பு வழக்குகள் உட்பட) | 2186 | 1596 | 1969 | 1468 | 1763 | 1376 |
| 4. | கன்னக்களவு | 5125 | 3048 | 5266 | 3126 | 5131 | 2980 |
| 5. | திருட்டு | 11950 | 9062 | 11969 | 9062 | 11196 | 8354 |
| **மொத்தம்** | | **19465** | **13880** | **19432** | **13862** | **18290** | **12890** |

## விளக்கப்படம் – I

**சொத்து தொடர்பான குற்றங்கள் தாக்கலானவை மற்றும் கண்டுபிடிக்கப்பட்டவை**

**2013–2015**



| **<u>பிற்சேர்க்கை – II</u>** | | | | |
|---|---|---|---|---|
| **வ. எண்** | **சொத்து** | **2013 (ரூபாய் கோடியில்)** | **2014 (ரூபாய் கோடியில்)** | **2015 (ரூபாய் கோடியில்)** |
| 1 | இழக்கப்பட்ட சொத்து | 190.29 | 142.90 | 131.15 |
| 2 | மீட்கப்பட்ட சொத்து | 146.59 | 98.04 | 85.79 |
| 3 | மீட்பு சதவீதம் | 77% | 69% | 65% |

## பிற்சேர்க்கை - III

**2013 முதல் 2015 வரை பதியப்பட்ட இந்திய தண்டனைச்சட்ட குற்றங்கள் (தலைப்புவாரியாக)**

| வ. எண் | குற்றத்தின் தலைப்பு | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| **சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள்** | | | | |
| 1 | ஆதாயக் கொலை | 121 | 127 | 107 |
| 2 | கூட்டுக் கொள்ளை | 83 | 101 | 93 |
| 3 | கூட்டுக் கொள்ளையில் ஈடுபட குழுமியிருத்தல் | 55 | 74 | 80 |
| 4 | வழிப்பறி | 2186 | 1969 | 1763 |
| 5 | கன்னக்களவு | 5125 | 5266 | 5131 |
| 6 | திருட்டு | 11950 | 11969 | 11196 |
| **கொடுங் குற்றங்கள்** | | | | |
| 7 | கொலை | 1806 | 1678 | 1641 |
| 8 | கொலை எனக் கருத முடியாத மரணம் விளைவிக்கும் குற்றம் | 3007 | 2922 | 2935 |
| 9 | காயம் ஏற்படுத்துதல் | 33 | 50 | 59 |
| 10 | அடிதடி வழக்கு | 20984 | 22156 | 22410 |
| 11 | கலவரங்கள் | 2701 | 2784 | 2648 |
| **பெண்களுக்கு எதிரான குற்றங்கள்** | | | | |
| 12 | கற்பழிப்பு | 923 | 471 | 450 |
| 13 | வரதட்சணை மரணங்கள் | 118 | 95 | 65 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | மானபங்கம் | 1271 | 1102 | 1163 |
| 15 | பாலியல் வன்கொடுமை | 313 | 229 | 20 |
| 16 | கணவன் மற்றும் உறவினர்கள் கொடுமை | 2471 | 2103 | 1900 |
| 17 | பெண் கடத்தல் | 1516 | 1479 | 1324 |
| **பிற முக்கிய குற்றங்கள்** | | | | |
| 18 | ஆள் கடத்தல் | 263 | 267 | 279 |
| 19 | நம்பிக்கை மோசடி | 238 | 242 | 252 |
| 20 | தீ வைத்தல் | 645 | 675 | 677 |
| 21 | மோசடி | 4647 | 4680 | 4816 |
| 22 | கள்ளநோட்டு | 320 | 160 | 186 |
| 23 | மரண விபத்துக்கள் | 14919 | 14601 | 14933 |
| 24 | மரணம் ஏற்படுத்தாத விபத்துக்கள் | 51571 | 52844 | 54253 |
| 25 | பிற இ.த.ச. குற்றங்கள் | 76313 | 65153 | 59177 |
| | **மொத்த இ.த.ச. வழக்குகள்** | **203579** | **193197** | **187558** |
| | **குற்ற விகிதாச்சாரம்** | **273.60** | **255.66** | **244.38** |
| | **மக்கள் தொகை (இலட்சங்களில்)** | **744.07** | **755.68** | **767.47** |

# <u>பிற்சேர்க்கை – IV</u>

## வன்குற்ற நிகழ்வுகளும், தீர்க்கப்பட்டவைகளும் – 2013 – 2015

| வ எண் | தலைப்பு | 2013 | | | | 2014 | | | | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவு* | கு.ப.# | பு.வி ** | பி.வ. முடிப்பு## | பதிவு* | கு.ப.# | பு.வி ** | பி.வ. முடிப்பு## | பதிவு* | கு.ப.# | பு.வி ** | பி.வ. முடிப்பு## |
| 1 | கொலை | 1806 | 891 | 833 | 82 | 1678 | 900 | 712 | 66 | 1641 | 1048 | 540 | 53 |
| 2 | கொலை முயற்சி | 3007 | 1224 | 1684 | 99 | 2922 | 1333 | 1505 | 84 | 2935 | 1508 | 1346 | 81 |
| 3 | காயம் | 20984 | 11883 | 7405 | 1696 | 22156 | 13320 | 7069 | 1767 | 22410 | 14044 | 6496 | 1870 |
| 4 | கலவரம் | 2701 | 1019 | 1313 | 369 | 2784 | 1172 | 1293 | 319 | 2648 | 1188 | 1134 | 326 |
| மொத்தம் | | 28498 | 15017 | 11235 | 2246 | 29540 | 16725 | 10579 | 2236 | 29634 | 17788 | 9516 | 2330 |

குறிப்பு: பதிவு* பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (வருடம் வாரியாக)

கு.ப. # குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவை

பு.வி.** புலன் விசாரணையில் உள்ளவை (வருடம் வாரியாக)

பி.வ. முடிப்பு## பிற வகையில் முடிக்கப்பட்டவை (கண்டுபிடிக்க முடியாதவை, உண்மைக்கு அல்லது சட்டத்துக்குப் புறம்பானவை, மாற்றம் அல்லது தள்ளுபடிசெய்யப்பட்டவை) வருடம் வாரியாக

| பிற்சேர்க்கை –V | | | | |
|---|---|---|---|---|
| **2013 முதல் 2015 வரை நடந்த கொலை நிகழ்வுகளுக்கான காரணங்கள்** | | | | |
| **வ. எண்** | **காரணங்கள்** | **2013** | **2014** | **2015** |
| 1 | குடும்பத் தகராறு | 425 | 405 | 418 |
| 2 | வாய்த் தகராறு | 305 | 299 | 341 |
| 3 | முன்விரோதம் | 331 | 287 | 278 |
| 4 | காதல் மற்றும் பாலியல் காரணங்கள் | 351 | 320 | 264 |
| 5 | பணம் கொடுக்கல் வாங்கல் | 65 | 90 | 71 |
| 6 | நிலத்தகராறு | 137 | 115 | 119 |
| 7 | குடிபோதையில் தகராறுகள் | 22 | 28 | 26 |
| 8 | வரதட்சணை | 12 | 9 | 6 |
| 9 | அரசியல் காரணங்கள் | 6 | 3 | 3 |
| 10 | இதர காரணங்கள்* | 145 | 104 | 108 |
| 11 | ஜாதி பாகுபாடு | 7 | 18 | 7 |
| **மொத்தம்** | | **1806** | **1678** | **1641** |

(குறிப்பு: • இதர காரணங்கள் – கண்டுபிடிக்க முடியாத வழக்குகளை உள்ளடக்கியது)

| பிற்சேர்க்கை –VI<br>பெண்களுக்கு எதிரான குற்றங்கள் | | | |
|---|---|---|---|
| **குற்ற வகைகள்** | **2013–ல் பதிவானவை** | **2014–ல் பதிவானவை** | **2015–ல் பதிவானவை** |
| பாலியல் பலாத்காரம்• | 923 | 471 | 450 |
| வரதட்சணை மரணம் | 118 | 95 | 65 |
| கணவர் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை | 2471 | 2103 | 1900 |
| மானபங்கம் | 1271 | 1102 | 1163 |
| **மொத்தம்** | **4783** | **3771** | **3578** |

**• 2014 மற்றும் 2015க்கான பாலியல் பலாத்கார வழக்குகள்** POCSO **சட்ட வழக்குகள் தவிர்த்தவையாகும்**

# பிற்சேர்க்கை –VII

## பெண்களுக்கு எதிரான குற்றநிகழ்வுகளும், தீர்த்துவைக்கப்பட்டவையும் 2013 – 2015

| வ. எண் | தலைப்பு | 2013 | | | | 2014 | | | | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவு* | கு.ப,# | பு.வி ** | பி.வ. முடிப்பு ## | பதிவு* | கு.ப,# | பு.வி ** | பி.வ. முடிப்பு ## | பதிவு* | கு.ப,# | பு.வி ** | பி.வ. முடிப்பு ## |
| 1 | பாலியல் பலாத்காரம் + | 923 | 429 | 445 | 49 | 471 | 226 | 215 | 30 | 450 | 240 | 188 | 22 |
| 2 | வரதட்சணை மரணம் | 118 | 48 | 70 | 0 | 95 | 48 | 47 | 0 | 65 | 39 | 25 | 1 |
| 3 | கணவர் மற்றும் அவரது உறவினர் களால் கொடுமை | 2471 | 1207 | 877 | 387 | 2103 | 1003 | 849 | 251 | 1900 | 862 | 752 | 286 |
| 4 | மானபங்கம் | 1271 | 699 | 426 | 146 | 1102 | 589 | 355 | 158 | 1163 | 662 | 343 | 158 |
| | **மொத்தம்** | **4783** | **2383** | **1818** | **582** | **3771** | **1866** | **1466** | **439** | **3578** | **1803** | **1308** | **467** |

குறிப்பு : பதிவு* பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (வருடம் வாரியாக)
கு.ப # குற்றப்பத்திரிகை தாக்கல் (தண்டனை வழங்கப்பட்டவை, விடுவிப்பு, முடித்து வைக்கப்பட்டவை & விசாரணை நிலுவையில் உள்ளவை – வருடம் வாரியாக)
பு.வி** புலன்விசாரணையில் உள்ளவை (வருடம் வாரியாக)
பி.வ.முடிப்பு ## பிறவகையில் முடிக்கப்பட்டவை (கண்டுபிடிக்க முடியாதவை, உண்மைக்கு அல்லது சட்டத்துக்குப் புறம்பானவை, மாற்றம் அல்லது தள்ளுபடி செய்யப்பட்டவை) வருடம் வாரியாக
பதிவு+ **2014** மற்றும் **2015**க்கான பாலியல் பலாத்கார வழக்குகள் POCSO சட்ட வழக்குகள் தவிர்த்தவையாகும்

# <u>பிற்சேர்க்கை</u> –VIII

## சாலை விபத்து வழக்குகள் – 2013 – 2015

| வருடம் | வாகன எண்ணிக்கை (இலட்சத்தில்) | சாலை விபத்துக்கள் | * கட்டம் 2 & 3 இடையிலான விகிதாச்சாரம் | மரணம் சம்பவித்தவை | மரண எண்ணிக்கை | * கட்டம் 2 & 5 இடையிலான விகிதாச்சாரம் | மரணம் சம்பவிக்காதவை | * கட்டம் 2 & 8 இடையிலான விகிதாச்சாரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 2013 | 182.87 | 66238 | 36 | 14504 | 15563 | 7.93 | 50675 | 28 |
| 2014 | 199.95 | 67250 | 34 | 14165 | 15190 | 7.08 | 53085 | 27 |
| 2015 | 215.58 | 69059 | 32 | 14524 | 15642 | 6.74 | 54535 | 25 |

குறிப்பு: *கட்டங்கள் 4, 7 மற்றும் 9 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள விகிதாச்சாரங்கள், 10,000 வாகனங்களுக்கு என்ற வகையில்.

கடந்த 10 வருடங்களில் நிகழ்ந்த சாலை விபத்துக்களின் எண்ணிக்கை குறித்த புள்ளிவிவரங்கள் பிற்சேர்க்கை IXல் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் மாவட்டவாரியாக பிற்சேர்க்கை Xல் கொடுக்கப்பட்டுள்ளன.

| **பிற்சேர்க்கை – IX<br>சாலை விபத்துக்கள் பற்றிய விவரங்கள்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வ. எண்** | **வருடம்** | **வாகனங்களின் எண்ணிக்கை** | **விபத்துக் களின் எண்ணிக்கை** | **வாகன எண்ணிக்கைக்கு ஏற்ப விபத்துக்களின் சதவிகிதம்** | **மரண எண்ணிக்கை** | **வாகன எண்ணிக்கைக்கு ஏற்ப மரண விகிதம்** |
| 1 | 2006 | 8851672 | 55145 | 0.62 | 11009 | 0.11 |
| 2 | 2007 | 9807155 | 59140 | 0.60 | 12036 | 0.11 |
| 3 | 2008 | 10789970 | 60409 | 0.56 | 12784 | 0.11 |
| 4 | 2009 | 11820613 | 60794 | 0.51 | 13746 | 0.11 |
| 5 | 2010 | 13119713 | 64996 | 0.50 | 15409 | 0.11 |
| 6 | 2011 | 14861695 | 65873 | 0.44 | 15422 | 0.10 |
| 7 | 2012 | 16625653 | 67757 | 0.41 | 16175 | 0.10 |
| 8 | 2013 | 18286774 | 66238 | 0.36 | 15563 | 0.09 |
| 9 | 2014 | 19995382 | 67250 | 0.34 | 15190 | 0.08 |
| 10 | 2015 | 21558272 | 69059 | 0.32 | 15642 | 0.07 |

## <u>பிற்சேர்க்கை – X</u>

### மாவட்டவாரியாக நிகழ்ந்த மொத்த சாலை விபத்துக்கள் – 2015

| வ. எண் | மாவட்டம் | விபத்துக்களின் எண்ணிக்கை | உயிரிழப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நீலகிரி | 269 | 47 |
| 2 | பெரம்பலூர் | 547 | 184 |
| 3 | அரியலூர் | 512 | 144 |
| 4 | சிவகங்கை | 954 | 265 |
| 5 | இராமநாதபுரம் | 912 | 297 |
| 6 | திருவாரூர் | 1067 | 178 |
| 7 | கரூர் | 1233 | 376 |
| 8 | கன்னியாகுமரி | 1148 | 244 |
| 9 | தேனி | 1286 | 254 |
| 10 | புதுக்கோட்டை | 1332 | 345 |
| 11 | விருதுநகர் | 1281 | 360 |
| 12 | தூத்துக்குடி | 1448 | 369 |

| | | | |
|---|---|---|---|
| 13 | திருவள்ளூர் | 1370 | 382 |
| 14 | நாகப்பட்டினம் | 1421 | 206 |
| 15 | திருவண்ணாமலை | 1833 | 477 |
| 16 | தருமபுரி | 1563 | 296 |
| 17 | திண்டுக்கல் | 1981 | 587 |
| 18 | கிருஷ்ணகிரி | 2059 | 643 |
| 19 | ஈரோடு | 2367 | 591 |
| 20 | நாமக்கல் | 2203 | 517 |
| 21 | தஞ்சாவூர் | 2323 | 496 |
| 22 | திருநெல்வேலி | 2352 | 554 |
| 23 | திருச்சிராப்பள்ளி | 2552 | 669 |
| 24 | மதுரை | 3004 | 639 |
| 25 | திருப்பூர் | 3240 | 851 |
| 26 | சேலம் | 3504 | 831 |
| 27 | காஞ்சிபுரம் | 3294 | 906 |

| | | | |
|---|---|---|---|
| 28 | விழுப்புரம் | 3557 | 813 |
| 29 | வேலூர் | 3276 | 766 |
| 30 | கடலூர் | 3781 | 504 |
| 31 | கோயம்புத்தூர் | 4054 | 962 |
| 32 | சென்னை | 7336 | 889 |
| | **மொத்தம்** | **69059** | **15642** |